ந்தகர்த்தா
ரசுரகர்த்தா } வை. மு. கோதைநாயகி அம்மாள்

JEGAN MOHINI

ஜெகன்மோகினி

மலர் III 1926 இதழ் 5.

OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB 1926

கன்மோகினி ஆபீஸ்,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
ஈ211, N22 JM
M26·3·5
182823

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் !!

ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்ருய்த் திருத்தப்பட்டு 5-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது உடனே எழுதுங்கள்.

விலை ரூ. 2

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாய ரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனாம்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

: : ஒரு மாதம் வரையிலும் : :



எங்களின் பாடர்ன் ரெகுலேடர் பெயர் பெற்ற சுவரில் மாட்டக்கூடிய கடியாரத்துடன், 18 காரட்டு தங்க கைக்கடியாரத்தை அழகிய தோல் பட்டையுடன், ஒரே தடவையில் ஆர்டர் செய்கிறவர்களுக்கு

இரண்டும் ரூ 10க்கு கொடுக்கப்படும்.

தனித் தனியாக வேண்டுமானால் சுவரில் மாட்டக்கூடியது ரூ 5

கையில் கட்டும் ரோல்டுகோல்டு கெடியாரம் ரூ 7 0



விலாசம்:—

காப்டன் வாட்சு கம்பெனி,
தபாற்பெட்டி நெ. 265, மதராஸ்.

சாத்துகவி.

வெண்பா.

1. கற்கண்டோ? பாகோ? கரும்பின் கனிரஸமோ?
சொற்கொண்ட நூலின் சுவைப்பிழம்போ?—விற்கொண்ட
மின்னுதல் மாதுமொழியும் 'மோகினியை'
என்னென் றுரைப்பேன் யான்.

அகவற்பா.

2. நானிலத்துக் கோ ரானனம் போன்ற
தேனெனத் திதிக்கும் மானினி பலர்மலி
சென்னையம் புரியில் சிறப்புற் றோங்கும்
நன்னயம் செறிந்த பொன்னிவாழ் நகரென
வல்லோர் சாற்றும் வல்லிக் கேணியில்,
"தாமின் புறுவதுலகின்புறக் கண்டெனும்,"
தேமறு நீதியைப் பாமரர் தமக்கும்
தெளிவுற விளக்கிக் களியுறக் கருதி,
தாதவிழ்தாரணி 'கோதை நாயகியும்'
"கலைமகள் வாழ்க்கை, முகத்ததென்ன,"
பாவலர் மெச்சும் நாவல் நடையில்
தந்திடும் நூலாம் தண்கடலமிர்த
வாகினிபோன்ற நம் 'மோகினி' நூற்கும்,
காரிகையன்ன நம் காரிகை தனக்கும்
அந்தமில் வாழ்க்கை வந்துறும் வண்ணம்
பைந்துளவணிந்த பகவனைத் துதிப்பாம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1926

விருத்தம்.

3. வேதமோ? மாயோன் விண்ணவர்க் குவந்தளித்தநவ
நீதமோ? நாண்மலரோ? நாமடந்தை தந்ததருட்பிர
சாதமோ? பங்கயத்தோன் சுதன் மீட்டும்யாழின்
கீதமோ? என்னே! 'கோதை' கூறுநம் "மோகினியே."

'அத்திமுகவனை' என்ற வர்ணமெட்டு.

(a) வாழி 'ஜெகன் மோகினி!' வாழி கோதைநாயகி!
வாழி இக்கதை வாசிப்போர், வளம்பெறப் பிறர்க்குரைப்போர்!

(b) வாழி 'வைதேகி'யே! வாழிவரும் நூல்களே!
வாழிவாழி வாழியே!! விக்கினமின்றி வாழியே!!

Nambipuram, A. Athmaramaiyer,
author of 'Sakuntha Rajan'
and
Sub - agent, Himalaya Assurance, Co., Ltd.,
Aruppukottai.

Office of the Controller of Purchase
Indian Stores Department
6, Esplanade East, CALCUTTA.
Dated, the 8th January.

I have just gone thro' with much delight & pleasure the 1st three issues of the "Jegan Mohini" received to day & could not but pen the following up to you.

The Plot Romance & the elegance of the Style is sure to awaken our sisters from the newly offsprung civilization back to the peaceful olden ones. It goes without saying that your ardent love & sympathy you have for your sisters & that with the sympathy of all around you, you are sure to succeed in your genuine attempt with the job you've put on hand.

Wish you every success in your career.

R. S. KRISHNA SWAMI,

[ஷை இரண்டு நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன்.—கிரந்தகர்த்தா.]

5-வது அதிகாரம்.

ஜெமீந்தாரின் படுகோலை.

திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அழகான ஒரு மாளிகையின் முன்பக்கத்தில் சுவரில் பதிப்பிக்கப்பட்டிருந்த பளபளப்பான பித்தளைத் தகட்டில் அடியில் வருமாறு விலாஸம் காணப்பட்டது.

எஸ். சங்கரநாதன் பி. ஏ. பி. எல்.,
ஹைகோர்ட் வக்கீல், சென்னை.

அந்த வீடு பார்ப்பதற்கு வெகு அழகாயும், மூன்று அடுக்கு மெத்தைகள் உடையதாயும் விளங்கிற்று. அந்த வீட்டில் ஒருநாள் இரவு சுமார் ஏழுமணிக்கு மெத்தையில் ஒரு மனிதர் சாய்மான நாற்காலியொன்றில் சாய்ந்திருந்தார். அவர் சுமார் நாற்பது வயது மதிக்கக்கூடியவராயும், பார்வைக்கு கம்பீரத் தோற்றமுடையவராயும், சாதாரண உடுப்பு அணிந்தவராயும் காணப்பட்டார். அவருக்கெதிரில், முப்பது முப்பத்திரண்டு வயது மதிக்கக்கூடிய மற்றொரு மனிதர் இன்னொரு சாதாரண நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். சாய்மான நாற்காலியில் சாய்ந்திருந்தவரே அந்த வீட்டின் எஜமானரான வக்கீல் சங்கரநாதமென்று நமது வாசகர்கள் யூகித்துக் கொள்ளலாம். எதிரிலிருந்த மனிதர் அவரிடத்தில் ஏதோ கேஸ் விஷயமாகப் பேச வந்தவரென்பது அடியில் காணப்பட்ட அவர்களது சம்பாஷணையால் விளங்கும்.

வக்கீல்:—ஐயா! நீர் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீர், நடந்ததை நடந்த பிரகாரம் சொல்லும். பிறகு, எனக்கு சந்தேகமான இடத்தில் நான் கேள்விகள் கேட்கிறேன். எல்லா விவரமும் எனக்கு நன்ருய்த் தெரிந்த பிறகுதான் நான் பதில் சொல்வேன்.

மற்றவர்:—என் பெயர் மாணிக்க முதலியாரென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். இதற்குமுன் நான் ஒரு தனவந்தருடைய வீட்டில் அவர்களுடைய பிள்ளைபோல இருந்து வந்தேன். இப்போது அவ்விதம் சொல்லிக் கொள்ளக்கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது.

எனக்கு நினைவு தெரிவதற்கு முன்னமேயே என் தகப்பனார் எங்களுடைய சொத்துகளை யெல்லாம் துர்நேசரோடு சேர்ந்துகொண்டு துர்விநியோகம் செய்து எல்லாவற்றையும் அழித்து விட்டாராம். பிறகு என் தாயார் எப்படியோ பிச்சையெடுத்து குடும்பத்தை நடத்திவந்தாளாம். பொருள் போன கொஞ்ச நாளைக்கெல்லாம் என் தகப்பனார் மன வியாகுலத்தினாலேயே காலம் சென்று விட்டாராம். அப்பொழுது எனக்கு வயது நான்கு. என் தங்கையின் வயது மூன்று. எப்படியோ எங்கள் தாய் எங்களை வைத்துக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து காலத்தைக் கடத்தி வந்தாள். எனக்கு வயது பதினைந்து ஆனதும், என் தாய் என்னை ஒரு தநவந்தர் வீட்டில் வேலைசெய்ய அமர்த்தினாள். நான் என் வேலையைச் செவ்வையாய்ச் செய்து எல்லோரிடத்திலும் பிரியமாய் நடந்து அவர்களுடைய பிரியத்தையும் சம்பாதித்துக்கொண்டேன். அங்கே எனக்கு ஒழிந்த வேளைகளில் நான் அந்த வீட்டு குமாஸ்தாவிடம் போய் "அப்பா" "ஐயா" என்று கெஞ்சி அவருடைய காலில் விழுந்து, கொஞ்சம் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டேன். அங்கே அடிக்கடி வந்த ஒரு தநவந்தருக்கு என்மேல் பிரியம் ஏற்பட்டு நாளடைவில் அது வளர்ந்து வந்தது. ஒருநாள் அவர் என்னைப் பார்த்து, "அப்பா! நீ என்வீட்டு குமாஸ்தாவாக வருகிறாயா?" என்று கேட்டார். அதற்கு நான் "ஐயா! எனக்கு தெய்வம்போல இருந்து என்னை ஆதரித்துவரும் இந்த எஜமானை விட்டு நான் எப்படி வருவேன்? அவருடைய மனதிற்கு விரோதமாக நான் நடக்கமாட்டேன்" என்றேன். அதற்கு அவர் "இவரே உன்னை அனுப்பினால் வருவாயா?" என்றார். அப்படியானால் நான் இணங்குவதாக ஒப்புக்கொண்டேன். உடனே அந்த தநிகர் என் எஜமானரிடம் போய்ப் பேசி, என்னை அழைத்துக் கொள்வதற்கு அவருடைய சம்மதியைப் பெற்றுக்கொண்டு வந்தார். நான் அவரோடு புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தேன். போனவன் அந்த வீட்டில் குமாஸ்தா வேலையை ஏற்று மிகவும் மரியாதையாக நடந்து வரத்தொடங்கினேன். கொஞ்ச காலத்தில் நான் அவர்களுடைய பிரியத்திற்குப் பாத்திரனானேன். அந்த தநிகரே ஒரு பெண் பார்த்து எனக்குக் கலியாணம் செய்து வைத்து, என் குடும்பத்தை ஆதரித்து வந்தார்; அவருடைய வீட்டுக்குப் பின்புறத்தில் எங்களுக்கும் ஒரு சின்ன வீடு கட்டிக்கொடுத்

182823

தார். எங்களுக்கு விவாகமாகி இரண்டு வருஷத்திற்குள், ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதையும் அவர்கள் மிகவும் வாஞ்சையாக வளர்த்து வந்தார்கள். அந்தக் காலம் முதல் நாங்கள் அவருடைய ஆதரவிலேயே இருந்து வெகு மரியாதையாக நடந்து வந்தோம். திடீரென்று விஷக்கடி வேளை வந்துவிட்டதுபோல இருக்கிறது. எங்கள் பிரபுவின் வீட்டில் நேற்று இரவு 11-மணிக்கு பயங்கரமான கொலை நடந்து போயிருக்கிறது. எங்கள் எஜமானர் கொலை செய்யப்பட்டுப் போயிருக்கும் விஷயம் உங்களுக்கு ஏற்கனவே எட்டியிருக்குமென்று நினைக்கிறேன். நாங்கள் எப்போதும் இருப்பது போலவே அன்றைக்கும் இருந்தோம். திடீரென்று எந்தச் சண்டாளர்கள் வந்து கொலை செய்தார்களோ தெரியவில்லை. ஐயோ! எங்கள் பிரபுவைப்போல உத்தம குணம் வாய்ந்த மனிதர் இந்த பூமியிலேயே இருப்பது அருமையென்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட பிரபுவை எந்தக் கல்நெஞ்சன் கொன்றானோ! ஆகா! அவனுடைய மனமும் கையும் எப்படித் துணிந்தனவோ! அது ஈசனுக்குத்தான் தெரியவேண்டும். அவர்கள் சவத்தையும் உருவில்லாமல் குத்திக் குளறி யிருக்கிறார்கள். அவர் போட்டிருந்த சட்டை, கட்டியிருந்த வேஷ்டி, அவருடைய ஜேபியிலிருந்த நோட்டு முதலிய எல்லாம் அப்படியே இருக்கின்றன. வேறு என்ன உத்தேசத்தோடு அவரைக் கொன்றார்களோ அதுதான் விளங்கவில்லை. போலீஸ்காரர்கள் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். இன்று மத்தியானம் எனக்கு ஒரு சேதி எட்டியது. என்மேல் அவர்களுக்கு சந்தேகமிருப்பதாயும், என்னைப் பிடித்துக் கைதி செய்யப் போவதாயும் எனக்கு சமாசாரம் எட்டியது. அதைக் கேட்க, எனக்கு கதிகலங்கிப் போய்விட்டது. ஐயோ! என் பஞ்சபூத சாட்சியாக என் எஜமானருக்கு நான் துரோகமே செய்யவில்லை. எல்லோரும் என்மேல் வீண்பழி சுமத்தப் பார்க்கிறார்களேயன்றி வேறல்ல. நீங்கள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும். அதோடு நிஜக்குற்றவாளி யாரென்பதையும் கண்டு பிடிக்க வழிதேடவேண்டும். நான் பகலிலேயே இரண்டுதரம் இங்கே வந்தேன். தாங்கள் வீட்டில் இல்லையென்று வேலைக்காரர்கள் சொன்னார்கள். எந்தப் பொய் சாக்ஷிகளை வைத்துக் கொண்டு எந்த நிமிஷத்தில் வந்து என்னைப் பிடித்துக்கொண்டு போய் விடுவார்களோவென்று எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆகையால்,

நான் முன் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டுமென்று நினைத்து உங்களிடம் வந்தேன். எப்படியாவது பிரயாசைப்பட்டு, இந்த வீண் அபவாதத்தை நீங்கள் விலக்கி உண்மையை வெளிப்படுத்தவேண்டும். போலீஸ்காரர் என்னைக் கைது செய்துகொண்டு போய்விட்டாலும் தாங்களேதான் என் தரப்பில் வாதாடி இந்த வழக்கை நடத்தவேண்டும். அதற்காக தங்களுக்கு எவ்வளவு பணம் சேர வேண்டுமோ அதை நான் கொடுத்துவிடுகிறேன். இதனால் என்னுடைய சொத்து முழுவதும் போவதானாலும், பரவாயில்லை. என்னைக் காப்பாற்றவேண்டியது தங்களுடைய கடமை'' என்று வெகு வணத்துடன் இரந்து கேட்டுக்கொண்டான்.

அவ்வளவையும் மௌனமாக இருந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த வக்கீல் ''ஐயா! மாணிக்க முதலியாரே! எல்லா விவரமும் தெரிந்துகொண்டேன். போலீஸார் கொலை நடந்த அன்றையதினமே வந்து விசாரிக்கவில்லையா? அப்போது யார் பேரிலும் சந்தேகம் உண்டாகவில்லையா?'' என்றார்.

மாணிக்க முதலியார்:—ஐயா! நேற்று இரவில்தானே கொலை நடந்திருக்கிறது. அப்பொழுது யாருக்கும் சந்தடியே தெரியவில்லை. இன்று காலையில் வேலைக்காரன் போய்ப் பார்த்துவிட்டு வந்து எஜமானர் கொலையுண்டு கிடப்பதாகச் சொன்னான். உடனே நான் போலீசாருக்குத் தகவல் தெரிவித்தேன். கொஞ்ச நேரத்தில் போலீசாரும் டாக்டரும் வந்து கூடிவிட்டார்கள். டாக்டர் சவத்தைப் பரீட்சித்துப் பார்த்து, கொலை நேற்று இரவு 11-மணி சுமாருக்கு நடந்திருக்க வேண்டுமென்றும், ஒருவித விஷக்கத்தியை உபயோகித்தே கொன்றிருக்க வேண்டுமென்றும் சொன்னார். ஆனால் இது கள்வன் களவாடவந்த காலத்தில் செய்த கொலையாகாது. எவரோ ஒரு காரியத்தையோ, காரணத்தையோ முன்னிட்டு இதைச் செய்திருக்கிறார்கள். ஏனென்றால், அவருடைய ஜேபியில் ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்று மணிபாக்ஸில் இருந்தது. அது திறந்து பார்க்கப்படக்கூட இல்லை. ஆகையால், டாக்டர் இது வேறு எதைக் கருதியோ செய்யப்பட்ட கொலை என்று சொல்லுகிறார். போலீஸ் இன்ஸ்பெக்டருடைய அபிப்பிராயமும் அப்படித்தான் இருக்கிறது. வைரக்கல்களால் அவருடைய பெயர் இழைக்கப்பட்ட மோதிரம்,

ரிஸ்டு வாச்சு, சங்கிலி முதலியவைகளெல்லாம் இருந்த இடத்திலேயே காணப்பட்டன. இவைகளையெல்லாம் கொண்டு போலீசாரும் டாக்டரைப்போலவே அபிப்பிராயப்பட்டனர். இதில் இன்னொரு விசேஷம்; இந்த சந்தர்ப்பத்தில் என் எஜமானருடைய சம்சாரமும், அந்த அம்மாளுடைய தம்பியும் ஏதோ காரியமாக ஊருக்குப் போனவர்கள் இன்னும் வரவில்லை. இந்த விபரீதச் செய்தியை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக ஓர் ஆள் ஊருக்குப் போயிருக்கிறான். அவர்களுடைய வருகையை எதிர்பார்த்து, சவத்தை அப்படியே வைத்து எல்லோரும் அதை பந்தோபஸ்தாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வந்த பிறகுதான் பிரேத விசாரணை நடக்கப்போகிறது. அதில் எவ்வித தீர்மானம் ஆகுமோ தெரியவில்லை. சேவகர்கள் ஒருவருக்கொருவர் குசு குசுவென்று பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றனர்.

வக்கீல்:—அவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்களென்பதை நீர் தெரிந்துகொள்ளவில்லையா?

முதலியார்:—நெடுநாளாய் நான் இவர்களுடைய வீட்டிலிருந்து எல்லா உளவையும் தெரிந்துகொண்டிருக்கிறேனாம். இவர்களுடைய சொத்துகளையெல்லாம் அபகரித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தோடு நானே இந்தக் கொலையை நடத்தி இருக்கவேண்டுமென்றும், யார் மேலாவது பழியைச் சுமத்திவிட்டு நான் எப்படியாவது தப்பித்துக் கொள்ள எண்ணி இருக்கிறேனென்றும், என்மேலே சந்தேகமிருக்கிறதன்றி வேறே யார்மேலும் சந்தேகமில்லையென்றும், போலீசார் விசாரணை நடத்தி என்னையே பிடித்துக்கொள்ளப் போகிறார்களென்றும் பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்டவுடனே தான் எனக்கு பயமுண்டாயிற்று. அதை உங்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று இங்கே ஓடிவந்தேன். இப்போது மணி எட்டு ஆகப்போகிறது. அவர்கள் வரும் நேரம் ஆகிவிட்டது. தாங்கள் எனக்கு வாக்குறுதி தரவேண்டும். என்னைக் காப்பது தங்கள் பாரம். ஸ்வாமி யறிய நான் யாதொன்றையும் செய்தவனேயல்ல. என்மேல் வரப்போகிறது அபாண்டமான குற்றமே யொழிய நியாயமானதல்ல.

—என்றான். அப்போது ஓர் ஆள் அவ்விடத்திற்கு வந்து "ஐயா! முதலியாரே! எஜமானியம்மாள் முதலியோர் வந்துவிட்டார்கள். உங்களைக்

கூப்பிடுகிறார்கள்'' என்றான். உடனே மாணிக்க முதலியார் வக்கீ லிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தனது எஜமானரான புருஷோத் தம முதலியாருடைய மாளிகையை அடைந்தார்.

அவ்விடத்தில் அநேக போலீஸ் வீரர்களும், இன்ஸ்பெக்டரும் டாக்டரும் இன்னும் பலரும் இருந்தார்கள். கட்டிலின்மீது சவம் கிடத்தப்பெற்றிருந்தது. அதன் பக்கத்தில் அவருடைய மனைவி, அவளது தம்பி வீரய்யா முதலியார் ஆகிய இருவரும் உட்கார்ந்து அழுது பிரலாபித்துப் புலம்பிக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் அவ்விடத்தை யடைந்த மாணிக்க முதலியாரைக் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கிருந்த வேலைக்காரர்களை நோக்கி "நேற்றிரவு இந்தக் கொலை நடந்தபோதாவது, அதற்குப் பிறகாவது,முந்தியாவது இங்கே என்ன விசேஷம் நடந்தது? அதை யார் யார் பார்த்தீர்கள்? எல்லாவற்றையும் அவரவர்கள் சொல்லுங்கள்.'' என்றார்.

முதல் சாட்சியாக முருகேசன் எழுந்துவந்தான். அவன் தன் னையே யாரோ கொலை செய்துவிட்டதாக எண்ணி வெலவெலத்து சவம் போல் நின்று சுற்றுமுற்றும் பார்த்து மருள மருள விழித்தான். அதைக் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனை அதட்டி சங்கதியைச் சொல்லும்படி தூண்டினர்.

உடனே அவன் "ஐயா! நான் மாடியில் முதல் வாசல் படியில் காவல் இருக்கிறவன். காவல் இருந்தேனா இருந்தேன். முதல்வாசல் படியண்டை காவல் இருந்தேனா, ஆமாம், இருந்தேன். காவலிருந் தேன்.'' என்று தனக்குத்தானே கேள்விகேட்டு மறுமொழி சொல்லிய படி இழுத்துக்கொண்டே போக,அதைக் கண்ட இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் அவனை அதட்டி "என்னடா, முட் டாள் தனமாய்ப் பேசுகிறாய்? இருந்தேனா இருந்தேன் என்றே எத் தனை தரம் சொல்லி அழுவாய்! மேலே அழுது தொலையடா.மணி ஆய் விட்டது.'' என்று கூறி கர்ஜித்தார். அதைக் கேட்ட முருகேசன் வெறிகொண்டவன்போலத் தனது இரண்டு கைகளாலும் முகத்தில் அறைந்துகொண்டு கோவென்று கூச்சலிட்டு பலமாய் அழத்தொடங்கி தொலை, தொலை, தொலை என்று சொல்லிக்கொண்டே அழுதான். அதைக் கண்ட எல்லோருக்கும் சிரிப்பும், கோபமும் பொங்கி யெழுந் தன. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரே பாய்ச்சலாக அவனுக்கருகில்

பாய்ந்து அவனது கன்னத்தில் பளீர் என்று ஓர் அடி கொடுக்க, உடனே முருகேசன் முன்னிலும் அதிக பலமாக ஓலமிட்டலறத் தொடங்கி "எஜமானே! ஐயோ! என்னை ஏன் அடிக்கிறீர்கள்? நீங்கள் சொன்னதைத்தானே நான் திருப்பிச் சொன்னேன். அழுது தொலை என்று நீங்கள் சொல்லவே, நான் அழுதுகொண்டே, தொலை தொலை தொலை என்று சொன்னேனேயன்றி வேறொன்றுமில்லையே" என்றான். அப்பொழுது இன்னொரு வேலைக்காரன் "இவன் பித்துக் கொள்ளி சாமீ! இவனிடம் நல்ல தனமாய்ப் பேசி. இவன் போகிற வழியே விட்டுத்தான் வாக்குமூலம் வாங்கவேண்டும்" என்றான்.

பிறகு இன்ஸ்பெக்டர் சாந்தமடைந்து நல்ல தனமாக அவனைத் தட்டிக்கொடுத்துக் கேட்க, அவன் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தான்:—

ஐயா! நான் முன்வாசலில் காவலிருந்தேனு, இருந்தேன். பிறகு வந்திடிச்சு. என்ன வந்திடிச்சு." என்று தனது கண்களை இறுக மூடிக்கொண்டு தபீரென்று கீழே விழுந்தான். அதைக் கண்ட எல்லோரும் நகைத்து வாய் மூடுமுன் அவன் மறுபடி எழுந்து நின்று பேசத்தொடங்கி "இது வந்திடுச்சு. இது என்ன தெரிந்ததா? இதுதான் தூக்கம். எனக்குத் தூக்கம் வந்திடுச்சு. நான் அப்படியே படுத்து நன்றாய்த் தூங்கிவிட்டேன். பிற்பாடு நான் கண் விழித்துப் பார்த்தபோது கெடியாரத்திலே மணி டாங் டாங்கென்று பன்னிரண்டு அடித்தது. உடனே நான் எழுந்து ஹால் முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு வீதிப்பக்கம் எட்டிப் பார்த்தேன். யாரோ போவது போல் தெரிந்தது. நான் கீழே இறங்காமலேயே, யார் அது என்று கேட்டேன். ஆனால், அவனுடைய காது செவிடுபோல இருக்கிறது. அவன் பேசாமல் போய்விட்டான். நானும் அதற்குமேல் ஒன்றும் செய்யாமல் படுத்துக்கொண்டேன். அவ்வளவுதான், அப்படியே தூங்கிப்போய் விட்டேன். காலையிலே தொக்கி வந்து என்னை எழுப்பி எஜமானை யாரோ கொன்று விட்டதாகச் சொன்னான். நான் பயந்து சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தேனு, எழுந்தேன். நீங்களும் வந்தீங்களா, வந்தீங்க, இதுதான் எனக்குத் தெரியும்.

என்று முருகேசன் வாக்குமூலம் கொடுத்தான். அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் கோபமாகவும் ஏளனமாகவும் பேசத்தொடங்கி "அப்பாடா! மலைகல்லி எலி பிடித்தானப்பா! இந்தச் சங்கதியைச் சொல்வதற்

குள் எவ்வளவு ஆடம்பரம், எத்தனை அபிநயம், சீ போ, அப்பாலே'' என்று அவனைப் பார்த்து அதட்டினார். அதைக் கேட்டவுடனே அவன் ஓட்டம் பிடித்தான். உடனே இரண்டாவது சாட்சி தொந்தி வந்தான். அவனது தொந்தியைக் கண்டே அவனுக்கு அந்த நாமம் சூட்டப்பட்ட தென்பது தானாகவே விளங்கும். எல்லோருக்கும் எதிரில் வந்து நின்ற அந்த மனிதன் தனது பெரிய தொந்தியைத் தடவிக்கொண்டே நின்று "நானு சாமி, சாமீ, கேளுங்க சாமீ, நானு இருக்கிறேனே. இல்லெ. நானு எங்க எசமான் படுக்கற அறைக்கி வெளியே காவலு இருப்பவனல்ல. ஆமாம், ஆமாம் காவல் இருப்பவன்தான். நானு 10-மணி வரையிலே முளிச்சிக்கினே இருந்தேன். அப்பாலெ, எங்க ஊட்டுலே கருப்பன், அதான் நம்பபுள்ளெ கருப்பனில்லெ. இம்புட்டுப்பையன், இப்பிடி ஓடியாந்தான். அவன் எறைக்க எறைக்க இப்பிடி ஓடியாந்தான்.'' என்று கூறியபடி பையன் ஓடியது போல அவ்விடத்திலேயே ஓடிக்காட்டி அங்கிருந்தவர் மேலெல்லாம் காலைவைத்து அங்குமிங்கும் இரண்டு மூன்றுதரம் ஓடினான். அதைக் கண்ட எல்லோரும் "இதென்னடா சனியன்! இங்கே இருக்கும் வேலைக்காரர்களெல்லோரும் ஒருவனைப்போல மட்டியாக இருக்கிறார்களே. இந்த ஜெமீந்தார் இப்படிப்பட்ட பிரகஸ்பதிகளை எங்கே இருந்துதான் பார்த்துப் பிடித்தாரோ தெரியவில்லையே.'' என்றுகூறிப் புளிசெய்து அவனது கையைப் பிடித்து நிற்க வைத்தனர். அப்போதே தனது சுய உணர்வைப் பெற்றவன்போல நின்று அவன் பெருமூச்சுடன் திணரத் திணர "அப்பாலே, பையன் அப்படி ஓடியாந்து என்னைப்பார்த்து, நயினா! அம்மாவுக்குக் கொயந்தெ பொறந்திக்கிது, ஓடியாஓடியா இன்னான்.! அம்பிட்டுத்தான் எனக்கு சந்தோசமாயிப்போச்சு, எஞ்சாமீ! நீங்கதான் சொல்லுங்களேன். கொயந்தெ பொறந்தா சந்தோசமில்லீங்களா? ஒடனே பொறப்பட்டு நான் ஊட்டுக்கு ஓடினேன். ஓடி கொயந்தெயப் பார்த்துப்புட்டு, மருந்து வச்சியை இட்டாந்து உட்டுப்புட்டு சென்னேரம் தரிச்சி இங்கனே ஓடியாந்தேன். அப்ப மணி 12 அடிச்சிச்சு. தூங்கற எசமானெ எளுப்பி, எனக்குப் புள்ளெ பொறந்த சங்கதியைச்சொல்லலா முன்னு பாத்தேன். அப்பறம் தூக்கத்துலெ எளுப்பினா திட்டப்போறாருன்னு சொம்மாப் படுத்துக்கொண்டேன். நானுபடுத்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இந்த ஐயா வெளிமெத்தைக்குப் போனாரு நானு ஏம் போறேன்னு கேக்காமே தூங்கிட்டேன். அப்புறம் நான்

வெடிகாலமே எழுந்து ஐயாவுக்கு இந்தச் சேதியைச் சொல்ல முன்ன தாகவே இடிச்சேன். அது தினம் உள்ளே தாளிட்டிருக்கும். இன்னக்கிக் கதவெத் தொட்டதும் அது தொறந்துக்கிச்சு. உடனே உள்ளே போயிப்பாத்தா இப்படி எங்க ஐயா செத்துக் கடந்தாரு. உடனே உள்ளே போய்ச் சொன்னேன். நீங்களும் வந்தீங்கோ. இதானுங்க சேதி—என்றான்.

இன்ஸ்பெக்டர்:—அடேய்! இந்த ஐயாதான் என்று உனக்கு நன்றாய்த் தெரியுமா?

தோந்தி:—நல்லாப் பாத்தேன் சாமீ! இந்த குமாஸ்தா ஐயாதான் கையிலெ என்னமோ முடிச்சு எடுத்துக்கினு போனாரே.

இன்ஸ்பெக்டர்:—கையில் என்ன எடுத்துக்கொண்டு போனார் உனக்குத் தெரியாதா?

தோந்தி:—தெரியாதுங்க—என்றான்.

அதன்பிறகு மூன்றாவது சாட்சி முத்தப்பன் வந்து சேர்ந்தான். அவன் "ஐபா! நான் பங்களா வீதி கேட்டாண்டெ காவல் இருக்கிறவன். நான் ராத்திரி நீர்கழிய எழுந்தபோது, மணி என்ன இருக்குமோ நான் பார்க்கவில்லை. குழாவண்டை போனபோது குழாவருகில் யாரோ இருந்தாப்பலே இருந்திச்சு. நான் மறைவாய் நின்று பார்த்தேன். இந்த ஐயா கொழாவண்டே துணியைக் கசக்கிக் கொண்டு இருந்தாரு. அங்கே செவேருன்னு ஜலம் போச்சு. உடனே நான் எங்கேயாவது அவருக்கு அடிகிடி பட்டுதோ, அதனாலே ரத்தம் வருதோன்னு சந்தேகப்பட்டு அவருக்கிட்டப்போயி, என்ன ஐயா இது? பாதிராத்திரியில் துணி துவைக்கிறீரே! ஏன் துணியெல்லாம் ரத்தமாயிருக்கிறது? கையெல்லாம்கூட ரத்தம். எங்கே அடிபட்டது என்றேன். அப்போது இவர், தான் படுத்துத் தூங்கும்போது மேலே இருந்து எலி இங்கிபுட்டியைத் தள்ளிவிட்டது. அது சிவப்பு இங்கியாகையால், ரத்தம்போல இருக்கிறதென்று சொன்னார். அப்படித்தான் இருக்குமென்று எண்ணி நானும் போய்விட்டேன். பிறகு இவரும் உடம்பு குளித்துப்போய்விட்டார். எனக்குத் தெரிந்தது இதுதான். பிறகு உதயத்திற்கெல்லாம் இப்படி அமர்க்களமாய் விட்டது". என்றான்.

அதைக் கேட்கவே, அங்கிருந்தோரனைவரும் மாணிக்க முதலி யாரை முறைத்து முறைத்துப் பார்த்தனர். அப்போது மாணிக்க முதலியார் "ஐயோ. நாம் அதை வக்கீலிடம் சொல்ல மறந்துவிட் டோமே" என்று தமக்குள்ளாகவே வருந்தினர். அதன் பிறகு வேறு சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் இராத்திரி படுத்தோம் தூங்கினேம், காலையில் எழுந்தோம், எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றனர்.

உடனே இன்ஸ்பெக்டர் மாணிக்கமுதலியாரை அழைத்து அவரது வாக்குமூலத்தைக் கேட்க, அவர் அடியில் வருமாறு கூறினர்:— ஐயா! நான் இந்த வீட்டில் வெகுநாளாக குமாஸ்தாவேலை பார்த்துவரு கிறேன். இந்த மகாப்பிரபுவினுல்தான் நான் ஒரு மனுஷ்யனுனேன். கடவுள் சாட்சியாய் நான் ஒரு பாவத்தையு மறியேன். நான் இராத் திரிகாலத்தில் பின் மாடியில் படுக்கிறது வழக்கம். அப்படியே நேற் றும் படுத்தேன். அங்கே உயர சாளரத்தில் இங்கிபுட்டி வைத்திருந் தது. நேற்று ராத்திரி எலி அந்த இங்கிபுட்டியைக் கீழே தள்ளி விட்டது. அது என்மேல் வந்து விழுந்தது. உடனே நான் எழுந்து பார்க்க, என் வேஷ்டியிலும், உடம்பிலும் சிவப்புமை பட்டுப்போயிரு ந்தது. அது இரத்தம்போல விகாரமாக இருந்தது. நான் உடனே எழுந்து முன் மாடி வழியாய்க் குழாயண்டையோய் என் துணியை அவிழ்த்துத் துவைக்கும்போதுதான், இவன் என்னைக் கண்டான். பிறகு நான் உடம்பு குளித்துவிட்டு என்னுடைய இடத்திற்குப் போய்ப் படுத்துக்கொண்டேன். உதயம் ஆனபிறகு இந்தச் சேதியை அறிந்தேன். இவ்வளவே எனக்குத் தெரிந்தது—என்றுர்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் அவ்விடத்தில் கூடியிருந்த பஞ் சாயத்தார்களை நோக்கி "சாட்சிகள் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தீர்களே.உங்களுடைய மூடிவான அபிப்பிராயம் என்ன?" என்றுர். பஞ்சாயத்தார் சிறிதுநேரம் தமக்குள் யோசனைசெய்து "வெகுகாலமாய் இங்கே இருந்து இந்த வீட்டை நன்றாக அறுத்துத் தின்ற பழம் பெருச்சாளியாகிய இவனே இன்னும் இந்த வீட்டை சர்வாங்கக்ஷவரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தக் காரி யத்தைச் செய்திருக்கலாம். இவன் கொலைசெய்த காலத்தில் நேரில்

பார்த்ததாக சாட்சி இல்லாவிட்டாலும், இவன் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறானென்பதற்குப் போதிய அநுமானங்கள் இருக்கின்றன. ஜெமீந்தார் கொலைசெய்யப்பட்டே இறந்திருக்கிறாரென்றும், அது விஷயத்தில் இந்த மனிதனை நியாயஸ்தலத்திற்குக் கொண்டுபோய் கிரமப்படி விசாரணை நடத்தவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். சவத்தின்மேலுள்ள நகைகள், பணம் முதலியவற்றை எடுத்தால், அவைகளை மறைக்கமுடியாமல் அகப்பட்டுக் கொள்வோமென்ற நினைவினால், இன்னும் பெருத்த பெருத்த லாபத்தைக் கருதி இந்த அற்ப லாபத்தை அலட்சியமாக விட்டிருக்கவேண்டுமெனவே தோன்றுகிறது. இங்கி புட்டியை எலி தள்ளிவிட்டதென்பது சமயோசிதமான கட்டுக்கதை. இவ்வளவு பெரிய ஜெமீந்தாருடைய வீட்டில், இங்கிபுட்டிகளை மேஜையின் மேல் வைப்பார்களா, அல்லது, ஆகாயத்திலுள்ள ஜன்னலின் மேல் கொண்டுபோய் வைப்பார்களா. இவன் செய்த காரியத்தை மற்றவர்கள் கண்டுகொள்வார்களல்லவா. அதற்காக இங்கிபுட்டியும் எலியும் உடனே வந்திருக்கின்றனவே யன்றி வேறல்ல'' என்றனர்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜவான்களை ஏவ, அவர்கள் மாணிக்க முதலியாருக்குக் கைவிலங்கு மாட்டி அவரை ஸ்டேஷனுக்கு அழைத்துப்போக ஆயத்தமாயினர். அந்த சமயத்தில் அவ்விடத்தில் ஒருமனிதர் திடீரென்று வந்துதோன்றினார். அவரதுபெயர் ராஜாராம் நாயுடு என்பது. அவர் போலீஸ் இலாகாவில் வெகுகாலமாய் இருந்து மகா அற்புதமான காரியங்களையெல்லாம்செய்து, அதி வீர தீரரென்று சகலராலும் புகழப்பட்டு அநேக ஜில்லாக்களின் சூப்பரின்டெண்டெண்டு வேலையை வகித்து நிரம்பவும் திறமையோடு பார்த்து, முடிவில், பென்ஷன் வாங்கிக்கொண்டு சென்னை திருவொற்றியூரில் வாசமாக இருந்து வருபவர். போலீசாரால் கண்டுபிடிக்க இயலாத சிக்கலான வழக்குகள், குற்றங்கள் முதலியவற்றில் பொது ஜனங்கள் அவருடைய உதவியை நாடிவந்தனர். அவர் அதன்பொருட்டு எவ்வித பிரதி பிரயோசனமும் எதிர்பாராமல், பரோபகாரத்தின் பொருட்டு தர்மத்திற்காக வேலைசெய்து தம்மாலேன்றவரையில் உழைத்துப் பாடுபட்டு, மற்றவரால் கண்பிடிக்க சாத்தியமற்ற பரம ரகஸிய

மான விஷயங்களையெல்லாம் வெகு சுலபத்தில் வெளிப்படுத்தி பிரக்யாதி பெற்றுவந்தார். ஜெமீந்தார் கொல்லப்பட்டுப் போனர் என்ற விஷயம் அவரது மனைவிக்கும், மனைவியின் தம்பிக்கும் தெரிவிக்கப்பட, அதைக் கேட்டு அவர்கள் அலறி யடித்துக்கொண்டு ஓடிவந்த போது அவர்கள் சென்னை ரயிலடியில் வந்திறங்கிய காலத்தில், அவர்களிருந்த துக்ககாமான நிலைமையைக் கண்ட ஒருமனிதர் அதன் காரணம் இன்னதென்று அறிந்துகொண்டு உடனே டெலிபோன் மூலமாய்த் திருவொற்றியூரிலுள்ள ராஜாராம் நாயுடுவுக்குச் செய்தியனுப்பி அவரை வரவழைத்தால், அவர் குற்றவாளியை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுவாரென்று சொன்னராதலால் அதைக் கேட்ட ஜெயராம முதலியார் அப்படியே திருவொற்றியூருக்கு டெலிபோன் மூலமாய்ச் செய்தி யனுப்பிவிட்டு வந்தாராதலால், அவர் உடனே புறப்பட்டு, முன் கூறப்பட்டபடி பஞ்சாயத்தாரின் முடிவு வெளிப்படுத்தப்பட்ட காலத்தில் அங்கே வந்து சேர்ந்தார். அவரைக் கண்டவுடனே அங்கிருந்த எல்லோரும் "ஆ! ராஜாராம் நாயுடு! ராஜாராம் நாயுடு" என்று வியப்போடு ஒருவருக்கொருவர் அவரது பெயரை வெளியிட்டுக்கொண்டனர். அவர் இன்னர் என்பது போலீசாருக்கு நன்ருகத்தெரியும். அவர் வந்ததைப்பற்றி அவர்கள் ஒருவித அவமானமும் கிலேசமுமடைந்தனராலுைம், தமது மனநிலைமையை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. இன்ஸ்பெக்டர் புன்சிரிப்போடு நமஸ்காரம் செய்து ராஜாராம் நாயுடுவை வரவேற்று உட்காரச்செய்தார். அவரும் சிரித்த முகமாயும் நயமாயும் இன்ஸ்பெக்டரிடத்தில் வார்த்தையாட, அந்த சமயத்தில் ஜெயராம முதலியார் வந்து வணக்கமாகக் கும்பிடுபோட்டு, தாம் ஜெமீந்தாருடைய மைத்துனரென்றும், தாமே டெலிபோன் மூலமாய்ச் செய்தியனுப்பியதென்றும் கூறி, கொலையின் விவரத்தையும், சாட்சிகள் சொன்ன வரலாறுகளையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

அதைக் கேட்டவுடனே ராஜாராம் நாயுடு "இறந்துபோன ஜெமீந்தாரிடத்தில் இந்த முதலியாருக்காவது, மற்றவருக்காவது பகைமை உண்டா?" என்ருர்.

ஜெயராம் முதலியார் "எங்களுக்குத் தெரிந்தவரையில் அப்படிப்பட்ட பகைமை இருந்ததாகத் தோன்றவில்லை. இறந்துபோன என்

அத்தானுக்கு இந்த உலகத்தில் பகைவரே இல்லையென்று சொல்ல வேண்டும். ஆனால், நான்குநாளைக்குமுன் ஒரு சிறிய விஷயம் நடந்தது. இங்கே வேலைசெய்துகொண்டிருந்த வீரன் என்பவன் ஏதோ ஓர் அற்ப விஷயத்தில் என் அத்தானிடம் எதிர்த்துப் பேசினான் என்று அவனை அவர் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அவருடைய ஆயுசுகாலத்தில், அவர் செய்த கடுமையான காரியம் அது ஒன்றுதான். வேறே யாருக்கும் அவர் எவ்விதகெடுதலும் செய்ததாக எங்களுக்குத் தெரியவில்லை" என்றார். உடனே ராஜாராம் நாயுடு "அவனை வேலையிலிருந்து விலக்கிய ஆத்திரத்தில், அவனே இந்தக் கொலையை ஒரு வேளை செய்திருக்கலாகாதா?" என்று ஒரு கேள்வி கேட்டார்.

அப்போது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு வேலைக்காரன் "ஐயா! அவன் ஊரிலேயே இல்லை. முந்தாநாளிரவுதான் அவன் ஊருக்குப் போனான். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவனோடுகூட என் அண்ணனும் ஊருக்குப்போனதனால், அது எனக்குத் தெரிந்தது". என்றான்.

அந்த விவரங்களையெல்லாம் கேட்டுக்கொண்ட ராஜாராம் நாயுடு பக்கத்தில் கிடத்தப்பட்டிருந்த சவத்தண்டைபோய் கால்நாழிகை வரையில் அதை நன்றாக உற்றுப்பார்த்து ஆராய்ச்சி செய்துவிட்டு வந்தார். வந்தவர் இன்ஸ்பெக்டரை நோக்கி "உங்களுடைய முடிவான அபிப்பிராயம் என்ன?" என்று வினவினார். உடனே இன்ஸ்பெக்டர் "இது சுலபமான விஷயந்தானே. இதில் எல்லோரும் ஒரேவித அபிப்பிராயத்திற்குத்தானே வரவேண்டும். வெவ்வேறு விதமான அபிப்பிராயம் கொள்வதற்கு என்ன ஏது இருக்கிறது. இந்த மாணிக்க முதலியார்தான் குற்றவாளியென்பது பரிஷ்காரமாகத் தெரிகிறதே. இதில் சந்தேகம் என்ன இருக்கிறது. இவர் சொல்லுகிறபடி எலி சிவப்புமையைக் கொட்டியிருந்தால், அந்தக் கறை தரையில் கொஞ்சமாவது பட்டிருக்காதா? அல்லது, படுக்கையில்தான் எங்கேயாவது பட்டிருக்காதா? படுக்கையில் படுத்திருந்த இவர்மேல் மாத்திரம் அந்த மை வந்து அலாக்காய்ப் பட்டதோ? சாளரத்திலிருந்த இங்கி புட்டி கவிழ்க்கப்பட்டிருந்தால், அது சுவரின்மேல் வழிந்திருக்கும். அதன் பக்கத்தில் போடப்பட்டிருக்கும் கட்டில் மெத்தை முதலியவைகளில் பட்டிருக்கும். அதோடு இவர் மேலும் கொஞ்சம் பட்டி

ருக்கும். அப்படி இல்லாமல், இங்கி இவர்மேல் மாத்திரம் வந்து குதித்ததென்றால், இங்கிபுட்டி ஆகாயத்தில் கூரையில்சொருகிவைக்கப் பட்டிருக்கவேண்டும். அல்லது, அந்த எலி இங்கியைத் தன் வாயால் இழுத்து இவருடைய உடம்பின்மேல் மாத்திரம் படும்படி பீச்சாங் குழாய் வைத்துப் பீச்சியிருக்க வேண்டும். அப்படியெல்லாம் நடக்க வில்லை. இவர் சொல்வது கேழ்வரகில் நெய் ஒழுகியதென்று சொன்ன கதைபோல இருக்கிறது. உங்களுடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறது?'' என்றார்.

ராஜாராம் நாயுடு புன்னகைசெய்து "என்னுடைய அபிப்பிராய மா? இவ்வளவு சீக்கிரமாக நான் எவ்வித அபிப்பிராயமும் கொடுக் கிறதே இல்லை. சங்கதியோ பிரம்மாண்டமான கொலை சங்கதி. அதுவும் தவிர, நான் வயசான கிழவன். நீங்களெல்லோரும் யௌவனப் பரு வத்தினர். என் மூளை அவ்வளவு கூர்மையாக சுருக்கென்று பாய வில்லை. அதனால்தான் சர்க்காரில் எனக்குப் பென்ஷன் கொடுத்து என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டு யௌவனப் புருஷர்களாய்ப் பார்த்து நான்செய்த உத்தியோகத்தில் அமர்த்தி இருக்கிறார்கள். ஆகையால், என்னுடைய அபிப்பிராயம் இவ்வளவு சீக்கிரத்தில் வெளியிடக்கூடிய நிலைமையில் இல்லை. ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் அநுபவத்தில் உண்மையாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட சிக்கலான வழக்கு களில் என்னுடைய அபிப்பிராயமும் மற்ற போலீசாருடைய அபிப் பிராயமும் நேர் விரோதமாகத்தான் முடிகிறது. அதுபோலவே தான் இதிலும் அபிப்பிராயபேதம் ஏற்படுமென்பதை நீங்கள் நிச்சய மாக நம்பலாம். சரி உங்களுக்கும் நேரமாகிறது. எனக்கும் நேர மாகிறது. நீங்கள் உங்கள் கிரமப்படி காரியங்களை நடத்துங்கள்'' என்றார்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஜெவான்களும் மாணிக்க முதலியாரைக் கைவிலங்கோடு நடத்தி அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர். மாணிக்கமுதலியாருடைய மனைவியும், மக்களும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு விழுந்து புரண்டு ஓலமிட்டு அலறிப் புலம்பினர்.

பிறகு ராஜாராம்நாயுடு ஜெயராம்முதலியாரை நோக்கி "ஐயா! முதலியாரே! இப்போது இராக்காலமாகையால், என்னுடைய முடி

வான அபிப்பிராயத்தை நான் இப்போது வெளியிட அசக்தனாயிருக்கி றேன். நீங்கள் பொழுதுவிடிந்த பிறகுதானே பிரேதத்திற்கு ஆக வேண்டிய கிரியைகளையெல்லாம் செய்யப்போகிறீர்கள்?" என்றார்

ஜெயராம முதலியார் "ஆம். பொழுது விடிந்த பிறகுதான் மற்ற காரியங்களையெல்லாம் நடத்தவேண்டும். இந்த இரவில் ஒன்றும் செய்யமுடியாது. இன்னும் ஊரிலிருந்து எங்களுடைய பந்துஜனங்க ளெல்லோரும் வரவேண்டும். அதன் பிறகுதான் காரியங்களை நடத்த வேண்டும்" என்றார்.

உடனே ராஜாராம் நாயுடு "சரி; உங்கள் பிரியப்படி செய்யுங் கள். எனக்கு நேரமாகிறது. நான் இப்போது என் ஜாகைக்குப் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டு பொழுதுவிடியும் சமயத்தில் நான் இங்கே வருகிறேன். வரும்போது, நான் சில முக்கியமான வஸ்துக் களை எடுத்து வருகிறேன். அவைகளை வைத்துக்கொண்டு பகல் வெளிச்சத்தில், இந்தப் பிரேதத்தை இன்னொருதடவை நன்றாக ஆரா ய்ச்சிசெய்து விடுகிறேன். அதற்கு அரைக்கால் நாழிகை காலங் கூடப் பிடிக்காது. அவ்வளவுதான் என் வேலை. அதன் பிறகு நீங்கள் உங்களுடைய காரியத்தைப் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு, அவ ருடைய காதில் ரகஸியமாக ஏதோ சில வார்த்தைகளைத் தெரிவித்த பின் அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டார்.

JL
N22-5H
N263

6-வது அதிகாரம்

விசித்ர சம்பவம்

மறுநாள் மாலை 6-மணி நேரமிருக்கலாம். திருவல்லிக் கேணிக் கடற்கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த கல்குறட்டின் மேல் ஒரு யௌவனப் புருஷர் நின்று தனது கையிலிருந்த அன் றைய சமாசாரப்பத்திரிகைப் படிப்பதும், அடிமேலடி வைத்து நடப்ப தும், கடலின் நீர்ப்பரப்பைப் பார்ப்பதுமாய்க் காற்று வாங்கிக்கொண் டிருந்தார். அப்போது தெற்குப்பக்கத்திலிருந்து வந்த ஒருவர் கடற் கரை எவ்வளவு நீளமிருக்கிறதென்று அளந்து பார்ப்பவர்போலத் தமது கால்களை நீட்டி நீட்டி நெடுமோலாய் நடந்துவந்து, சமாசாரப் பத்திரிகையும் கையுமாய் அடிமேலடி வைத்து அடியளந்து நின்ற

182823

மனிதரைக் கண்டு "என்ன ஐயா! அடியளந்தாரே! என்ன சங்கதி! க்ஷேமமா! உம்மைப் பார்த்து வெகு காலமாயிற்றைய்யா?" என்றார்.

அதைக் கேட்ட மற்றவர் "வாரும் ஐயா! ஊரளந்தாரே! எல்லாம் உம்முடைய தயவில் க்ஷேமந்தான். எங்கே இப்படி ரொம்பவும் அவசரமாக வந்துகொண்டிருக்கிறீர்?" என்றார்.

ஊரளந்தார்:—என்ன ஐயா! உமக்குத் தெரியாதா? இன்று திருவல்லிக்கேணியில் ஒரு பாட்டுக்கச்சேரி நடக்கிறதென்று சொன்னார்களே! அதற்கெல்லாம் நீர் போகிறதில்லைபோலிருக்கிறது. நான் மைலாப்பூரிலிருந்து புறப்பட்டு சீக்கிரமாக வந்துவிட வேண்டுமென்று நினைத்துத்தான் வந்தேன். வழியில், ஒரு மோட்டார் விபத்து நேர்ந்தது. ஒரு துரை ஏறிவந்த மோட்டார்வண்டி ஒரு பசுமாட்டின்மேல் ஏறிவிட்டது. அந்த அவஸ்தையைப் பார்த்துக்கொண்டே கொஞ்ச நேரம் நின்றுவிட்டேன். அதனால் கொஞ்சம் தாமசமாய் விட்டது. அதனால்தான் வேகமாய் வருகிறேன்.

அடியளந்தார்:—ஓ! அப்படியா சங்கதி! பாட்டுக்கச்சேரி என்று சொல்லிக்கொண்டார்கள். சிநேகிதர் யாருமில்லாமல் தனியாய்ப்போக இஷ்டமுண்டாகவில்லை. ஆகையால் இங்கே வந்து இன்றைய சமாசாரப்பத்திரிகை யொன்று வாங்கிப்படித்துக்கொண்டே இருந்தேன். அதிருக்கட்டும்; இன்று யார் யாருடைய பாட்டுக் கச்சேரி?

ஊரளந்தார்:—டமால்புரம் குமாரசாமி பிடில், அழிஞ்சிஹூர் கிழிஞ்சநம்பி கஞ்சிரா, அழுமூஞ்சி அழகிரிநாயகர் மிருதங்கம், சோதாப்பேட்டை மூதேவிபாகவதர் வாய்ப்பாட்டு. இந்த மாதிரி ஜதை மகாவைத்தியனாதையர், பட்டணம் சுப்ரமணிய ஐயர் முதலியவர்களுடைய காலத்திற்குப் பிறகு அமைந்ததே இல்லையாம்.

அடியளந்தார்:—ஓ! அப்படியா! பேஷ்! நல்ல முதல்தரமான ஜமா! பாட்டுக்கச்சேரி 4-30 மணிக்கு ஆரம்பமாயிருக்குமே. இப்போது மணி ஆறு இருக்கும்போலிருக்கிறதே. உள்ளே இடம் அகப்படாதே.

ஊரளந்தார்:—உள்ளே இடம் இருந்தால், உள்ளே போவோம். இல்லாவிட்டால் வாசலில் நின்றாவது கேட்போமே. கொஞ்சமாவது சப்தம் கேட்காமலா போகும்.

அடியளந்தார்:—அப்படியானால், போகலாம்—

என்று கூறி ஊரளந்தாரோடு விசையாக நடந்துவர, இருவரும் விரைவாகத் திருவல்லிக்கேணியை நோக்கி நடந்துவரத் தொடங்கினர். அப்போது அவர்கள் அடியில் வருமாறு தங்களுக்குள் சம்பாஷணை புரிந்துகொண்டே வந்தனர்.

ஊரளந்தார்:—ஏன் ஐயா! சமாசாரப்பத்திரிகை வாசித்தீரே! அது இன்றையதுதானே? விசேஷம் ஏதாவது உண்டா?

அடியளந்தார்:—இன்றைய பத்திரிகைதான். பழைய பத்திரிகையை யாராவது வைத்துப்படிப்பதும் உண்டா? இன்றைய பத்திரிகையில் நல்லநல்ல சங்கதியெல்லாம் வந்திருக்கிறது. என்ன போம். ஊர் கெட்டகேட்டை என்னவென்று சொல்லுவேன்! எங்கே பார்த்தாலும் கொலையும், திருட்டும், மோசமும், மோட்டார் விபத்துமாகத்தான் இருக்கின்றன. நேற்று ராத்திரி இந்தத் திருவல்லிக்கேணியில் ஒரு பயங்கரமான கொலை நடந்திருக்கிறது பாரும். அதை நான் என்னவென்று சொல்லப்போகிறேன்! அதை நினைக்கும்போதே பயமாக இருக்கிறது. ஒரு பெரிய லக்ஷப்பிரபு இருந்தார். அவருக்கு சந்ததியே கிடையாதாம். அவர், அவருடைய சம்சாரம், சம்சாரத்தின் தம்பி ஆகிய மூவரும் ஏதோ காரணத்தை முன்னிட்டு இந்த ஊரில் வந்து வாசம்செய்து கொண்டிருந்தார்களாம். அந்த லக்ஷப்பிரபுவின் சம்சாரமும் அவருடைய தம்பியும் எங்கேயோ ஊருக்குப் போயிருந்தார்களாம். லக்ஷப்பிரபு தனியாயிருந்த சமயம் பார்த்து, நேற்று இரவு பன்னிரண்டு மணிக்கு அவருடைய குமாஸ்தாவே அவரைக் கொன்று கண்டதுண்டமாக வெட்டி அடையாளம் தெரியாமல் போட்டுவிட்டானும். அந்த குமாஸ்தாவை அவர்கள் பிள்ளைபோல வளர்த்து மிகவும் பிரியமாக ஆதரித்து வந்தார்களாம். வளர்த்த கடா மார்பில் பாய்கிற மாதிரி அந்தப் பாதகன் தன்னை ரக்ஷித்த மகோபகாரியை ஒரு நிமிஷத்தில் கொன்றுபோட்டு விட்டானைய்யா? இப்படிப்பட்ட அட்டூழியம் வேறே எங்கேயாவது நடக்குமா?

ஊரளந்தார்:—ஆம். ஆம். இதைப்பற்றி நான் இன்றையதினம் பகலில் கேள்விப்பட்டேன். ஏதோ ஒரு சமஸ்தானத்தின் ஜெமீந்தாருடைய கொலையைப்பற்றித்தானே நீர் பேசுகிறீர்?

அடியளந்தார்:—ஆம். அந்த விஷயந்தான். அது மைலாப்பூரி லுள்ள உமக்குத் தெரிந்திருக்கிறது. இதே ஊரிலுள்ளவனுன எனக் குத் தெரியாமல் போய்விட்டதே!

ஊரளந்தார்:—ஆம். வாஸ்தவம்தானே. இந்த ஊர் அற்ப சொற்பமானதா? இந்த சென்னப்பட்டணத்தின் முகம் இதுதானே. இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அயல் நாடுகளிலிருந்து கப்பலில் வரும் புது நாகரிகமெல்லாம் நேராக வந்து இந்த ஊரில் தானே இறங்குகிறது. இங்கே இருக்கும் நீங்களெல்லோரும் ஜென் டில்மேன். வெள்ளைக்காரர் எப்படி தம் தம்முடைய காரியங்களை மாத் திரம் கவனித்து, அன்னியருடைய விஷயங்களில் தலையிடாமல் இருப் பதுதான் சிரேஷ்ட குணமென்று வைத்துக்கொண் டிருக்கிருர்களோ, அதுபோலவே, அந்தக் குணம் உங்களிடத்திலும் இருக்க வேண்டியது அவசியந்தானே. இந்த வீட்டில் இருக்கிறவன் பக்கத்து வீட்டில் யார் இருக்கிருர்கள் என்பதையாவது, அங்கே என்ன நடக்கிறதென் பதையாவது கவனிப்பது சாத்தியமா? இந்த ஊரில் மனிதருடைய ஒவ்வொரு நிமிஷமும் அவ்வளவுக் கவ்வளவு பணம். அவர்கள் தம் முடைய மூளையை ஏதாவது ஒரு வழியில்செலவழித்தால், அவ்வளவும் பணமாகஉருமாறித்திரும்பி அவருடைய பெட்டிக்குவந்துசேருகிறது. அநாவசியமாக அன்னியருடைய விஷயங்களில் தலையிடுவது வீண் நஷ் டந்தானே. ஒரே வீட்டில் பத்துக்குடித்தனக்காரர்கள் இருக்கிருர் கள். கணக்கெடுத்தால் அவர்களுடைய தொகை முப்பது நாப்பதுக்கு வரும். அத்தனை பேரையும் தெரிந்துகொண்டால் எவ்வளவு பொழுது வீணுகும். அவர்களோடு பழக்கம் செய்துகொண்டால், ஒவ்வொரு வரிடம் 5 நிமிஷநேரம் பேசவாவது வேண்டியிருக்கும். அதனுல் ஒரு நாளில் எத்தனை மணிநேரம் வீணுகும். அத்தனை பேர்களுடைய சுக துக்கங்களையும் நாம் மனசில் வாங்கிக்கொண் டிருந்தால், அது ஒரு மனிதனுடைய மனசு தாங்கக்கூடியதாக இருக்குமா? அல்லது, அத் தனை விவகாரங்களுக்கும் ஒரு மனிதன் ஈடுகொடுப்பதென்ருல், ஒரு நாளிலுள்ள இருபத்து நாலு மணி நேரமும், அவனுக்கு அது வேலை கொடுத்துக் கொண்டேதா னிருக்கும். அதன் பிறகு அவன் தன் னுடைய குடும்பக் காரியங்களையாவது ஜீவனோபாயத்தை யாவது கவ னிக்க அவகாசம் கிடைப்பது சந்தேகந்தான். அநேகமாய், இந்த

ஊரிலுள்ள ஒவ்வொரு வீடும் ஒரு சிறிய ஊர்போல இருக்கிறதே யன்றி வேறல்ல. உள்ளே போகிறவன் போகலாம், வருகிறவன் வரலாம். அவன் யாரைத் தேடிக்கொண்டு போகிறானோ வென்று நினைத்து ஒவ்வொருவரும் தம் தம் ஜோலிகளை கவனித்துக்கொண்டு பேசாமல் இருந்து விடுகிறார்கள். இந்த ஏற்பாட்டில் திருடர்களுக்கும், மோசக்காரர்களுக்கும், அயல் மாதரை நாடிச்செல்கிறவர்களுக்கும்தான் நல்ல அநுகூலம். முதல் கட்டில் ஒரு பிணத்தைப் போட்டுக்கொண்டு ஜனங்கள் அழுதுகொண்டே இருக்கிறார்கள். இரண்டாவது கட்டில் ஹார்மோனியத்தை வைத்துப் பாடிக்கொண்டு சிநேகிதர்கள் குதூகலமாக விருந்து நடத்துகிறார்கள்; மூன்றாவது கட்டில் ஒருவருடைய தகப்பனாருக்குத் திதி நடந்துகொண் டிருக்கிறது. நாலாவது கட்டில் கலியாணப் பெண்ணையும் பிள்ளையையும் மணையில் வைத்து நலங்கு நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட அற்புதமான ஊரில் உம்முடைய தெருவிற்கு ஐந்தாறு தெருவிற்கு அப்பால் நடந்திருக்கும் இந்தக் கொலை சங்கதி எப்படித் தெரியப்போகிறது? நான் இருப்பதான மைலாப்பூர் ஒரு சிறிய கிராமம்போல இருக்கிறது. யாராவது ஒருவர் ஒரு புதிய சங்கதியைக் கொண்டுவந்து மூட்டையை அவிழ்த்தால், அது உடனே ஊர் முழுதும் பரவி விடுகிறது. இது உமக்குத் தெரியாத சங்கதியா என்ன? நீங்கள் எல்லோரும் டெலிபோனை எப்போதும் காதில் வைத்து வேறே பேட்டைகளில் நடக்கும் விஷயங்களை அப்போதைக் கப்போது தெரிந்துகொண்டே இருக்கிறீர்கள். பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறதென்பதை மறுநாள் ஸாயங்காலம் வரும் சமாசாரப்பத்திரிகையில் படித்துத்தான் நீங்கள் ஆச்சரியப் படவேண்டும். இது உமக்குத் தெரியாத சங்கதியல்லவே.

அடியளந்தார்:—என்ன, ஐயா ஊரளந்தாரே! வாழைப்பழத்தில் ஊசியைச் சொருகுவது போல வெகு நயமாக எகத்தாளி பண்ணுகிறீரே! இந்த மாதிரி ஒருவருடைய சுகத்தினாலாவது, துக்கத்தினாலாவது மற்றவர் பாதிக்கப்படாமல் இருப்பதான வெறுப்பு விருப்பற்ற ஈசுவர நிலைமையை மனிதன் உண்டாக்கிக் கொள்வது சுலபமான காரியமா? பட்டினத்துப் பிள்ளையார் முதலிய மகான்கள் கூட வேண்டுதல் வேண்டாமையை விலக்க அரும்பாடுபடவில்லையா. அப்படிப்பட்ட அருமையான தபோதன குணம் இயற்கையிலே மனிதருக்கு உண்டாகும்படி செய்கிறது எது? இப்படிப் பல குடும்பத்தினரும் வெவ்வேறு வீட்

டில் தனித்தனியாக இருக்க சக்தியற்றவர்களாய் ஒரே வீட்டில் தேனடை வைத்துக் கொண்டிருப்பதான இந்த அற்புத ஏற்பாடு எப்படிப்பட்ட மகரிஷிகளாலும் ஸாதிக்க இயலாத அதியற்புதமான ஒரு காரியத்தை ஸாதிக்கிறது பார்த்தீரா?

ஊரளந்தார்:—ஒவ்வொரு வீட்டிற்குப் பக்கத்திலும் ஏற்பட்டிருக்கும் காப்பிக் கடைகள் செய்யும் அதைவிட அபூர்வமான வேலையை நீர் கவனிக்கவில்லை போலிருக்கிறது? ஊரிலுள்ள பறையர் முதல் பார்ப்பார் ஈருகவுள்ள சகலமான ஜாதியாரும் ஒன்ருகக் கூடியிருந்து சமபந்தி போஜனம் பண்ணும்படி காப்பிக்கடைகள் செய்கின்றனவே. அதன் பெருமை எப்படி இருக்கிறது பார்த்தீரா? இந்தக் காப்பிக்கடைகள் வருவதற்குமுன் நிலைமை எப்படி இருந்த தென்பது உமக்குத் தெரியுமா? உதாரணமாக ஒரு வைஷ்ணவப் பிராமண ஜாதியை எடுத்துக்கொள்வோம். அந்த ஜாதி வடகலையென்றும் தென்கலையென்றும் இரண்டு முக்கியமான பகுப்பாகப் பிரிந்திருக்கிறது. ஒவ்வொரு பகுப்பும் ஆத்தூரார் சேத்தூரார் ஆலம்பாக்கத்தார் வேலம்பாக்கத்தார் என்று ஒவ்வோர் ஊராரும் ஒவ்வொரு தனியான ஜாதியாராய் இருந்து, தாம்தாமே சிரேஷ்டமானவரென்றும், பரிசுத்தத்தில் மற்றவர் தமக்குத் தாழ்ந்தவரென்றும் நினைத்துக்கொண்டு, ஓரிடத்தில் போஜனத்திற்கு உட்காரும்போது ஒருவர் வடக்கு முகமாய்த் திரும்பியபடி உட்கார்ந்து தமது இலையிலுள்ள பதார்த்தம் மற்றவருக்குத் தெரியாதபடி வைத்துக்கொண்டு போஜன மருந்தினல், இன்னெருவர் தெற்குப்பக்கமாய்த் திரும்பி உட்கார்ந்து கொண்டு, பள்ளிக்கூடத்துப் பையன்கள் ஒருவர் எழுதுவதை மற்றவர் பார்க்காதபடி முதுகுக்குமுதுகு வைத்து நின்று எழுதுவதுபோல உட்கார்ந்து போஜனம் செய்தகாலம் எப்படி மாறிப் போய் விட்டது பார்த்தீரா? இம்மாதிரி நடந்து கொண்டவர்கள் நாம் மேலே குறித்த ஒரு ஜாதியார் மாத்திரமல்ல. இந்த தேசத்திலுள்ள சகலமான ஜாதியாரிலும் அப்படியே பல உட்பிறிவினர் இருந்து இதேமாதிரி தமது போஜனத்தை மறைத்து தம்மினும் வேருன ஜாதியார் அதைப் பார்க்காதபடி உண்டகாலம் மலையேறிப் போகும்படி செய்யும் காப்பி ஓட்டல்களின் மகிமைக்குமுன் எதன் மகிமை நிற்கும்! இப்போது அந்தக் கடைகளில் பிராம்மணருக்

கென்றும், மற்றவர்களுக்கென்றும், பஞ்சமர்களுக்கென்றும் தனித் தனி இடம் ஏற்படுத்தப்பட்டிருந்தும் ஒரு பிராம்மணர் தமது பஞ்சம நண்பர் ஒருவரோடு காப்பிக்கடைக்கு வந்தால், இருவரும் தமாஷாக உண்ணும்போது, ஒருவரை விட்டொருவர் பிரிய மனம் வருகிற தில்லை. பஞ்சம நண்பர் பிராம்மண நண்பர் இருக்கும் இடத்திற்குப் போக முடிகிறதில்லை யாகையால், பிராம்மண நண்பர் பஞ்சமர்களு டைய இடத்திற்குப்போய்த் தமது நண்பருக்குப் பக்கத்தில் உட் கார்ந்து உல்லாஸமாக புஜித்துவிட்டுப் போகிறதை நாம் பார்க்கி ரோமே. எத்தனையோ யுகம்யுகமாய் முயன்றும் செய்யமுடியாத இந்த மகா அபூர்வமான மாறுபாட்டைக் காப்பிக்கடைகள் வெகு சுல பத்தில் செய்கின்றனவே. இந்த மகிமை பெரியதா? அல்லது, நீர் சொல்லுகிறபடி, ஒரே வீட்டில் பல குடும்பத்தார் இருப்பதால், ஒரு வருடைய சுகதுக்கம் மற்றவருக்கு உறைக்காமலும் வெறுப்பு விருப்பு இல்லாமலும் போவதாகச் சொல்லுகிறீரே, அந்த மகிமை பெரியதா? நீரே யோசித்துப்பாரும்.

அடியளந்தார்.—ஒவ்வொன்றும் ஒருவிதமான பெருமை. அதற்கு அதே நிகர், ஒன்று பிரிக்கிறது, இன்னொன்று சேர்க்கிறது. முடிவில், பழைய நிலைமைக்கு என்றும் அழிவில்லையல்லவா?

ஊரளந்தார்:—(புரளியாக நகைத்து) ஆம். ஆம். நீர் சொல்வது நூற்றில் ஒரு பேச்சு. ஒரு டாக்டர் ஒரு மனிதனை கழுத்து வேறு, கைகள் வேறு, கால்கள் வேறு, உடல்வேறாக வெட்டி ஒன்றிற் கொன்று சம்பந்தமில்லாமல் ஆபரேஷன் செய்கிறார். இன்னொரு டாக்டர் தலை, கைகள், கால்கள், உடல் எல்லாவற்றையும் ஒரு கம்பி யால் குத்தி ஒரே மாலையாகச்சேர்த்து ஒன்றாக்கி ஒரு ரூபப்படுத்தி விடுகிறார். உடனே பழைய மனிதன் எப்படி உண்டாவானோ, அப்படித் தான் நீர் சொல்வதிலும் பழைய நிலைமை அழியாமல் இருக்கும். போதும் ஐயா. இந்தப் பேச்சு. நாம் போகும் வழியில் வரிசையாக காப்பி கிளப்புகள் இருக்கின்றன. நாம் பேசுவது எந்தக் கடைக்காரர் காதிலாவது விழப்போகிறது. விழுந்தால் அதன் பிறகு நாம் காப்பி சாப்பிடப்போனால் தடியை எடுத்துக்கொண்டு அடித்துத் துரத்த வந் தாலும் வந்து விடுவார்.

அடியளந்தார்:—ஓகோ. அப்படியா! காப்பி ஓட்டல்களுக்குப் போனால் ஜாதியாசாரமெல்லாம் போய் விடுகிறதென்று நீர்தானே இப்போது சொன்னீர். அதைத் தெரிந்துகொண்டும், நீரும் அங்கேபோய்க் குடிக்கிறவராகத்தானே இருக்கிறீர். நீர் சொல்லுகிற உபதேசமெல்லாம் மற்றவருக்காகத்தான் போலிருக்கிறது. உமக்கும் உமது உபதேசத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை போலிருக்கிறதே!

ஊரளந்தார்:—(சிரித்துக்கொண்டு) ஆம். ஐயா! மனிதனுடைய நாக்கு ருசி அப்படிப்பட்டது. சில விஷயங்கள் பிசகென்று நமக்குத் தெரிந்தாலும், அதை விலக்க நம்மால் முடிகிறதில்லை. அதிலும் இந்தக் காப்பிப் பைத்தியம் இருக்கிறதே. இந்தப் பைத்தியத்திற்கு சமதையானது வேறே இல்லவே இல்லை. மூக்குப்பொடிப் பைத்தியம், சுருட்டுப் பைத்தியம் முதலிய மற்ற பைத்தியங்களெல்லாம் இந்தக் காப்பிப்பைத்தியத்திற்கு உரைபோடக்காணாது. போன வருஷத்தில் காவிரியில் அபரிமிதமான வெள்ளம் பெருகி, ஸ்ரீரங்கம், திருச்சினாப்பள்ளி முதலிய ஊர்களையெல்லாம் தெப்பம்போல மிதக்கச்செய்த காலத்தில், ஸ்ரீரங்கத்திலுள்ள ஒருவர் மூக்குப்பொடிப் பைத்தியம் பிடித்து, சுமார் ஒரு பனை ஆழமுள்ளதும் ஒரு மயில் தூரம் பரவியிருந்ததுமான வெள்ளத்தில் நீந்திக்கொண்டு திருச்சினாப்பள்ளிக்குப் போய் மூக்குப்பொடி வாங்கிக்கொண்டு வந்ததாக நாம் பத்திரிகைகளில் படிக்கவில்லையா. அதை விட்டு நாம் சிகரெட்டுப் பைத்தியத்தை எடுத்துக்கொண்டால், அதன் ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவேன்! ஐந்தாறு தினங்களுக்கு முன் நான் ஒரு காரியம் நடந்ததை என் கண்ணால் பார்த்தேன். ஒரு பிராம்மணருடைய சாப்பாட்டுக் கடையிலிருந்து ஒரு சிறிய பிராம்மணப்பையன் பித்தளை அடுக்குப் பாத்திரத்தில் சாப்பாடு எடுத்துக்கொண்டு, அதைப் பக்கத்துத் தெருவிலிருந்த ஒரு கனவானுக்குக் கொடுத்துவிட்டு வருவதற்காக ரஸ்தாவோடு போனான். அவனுக்கு சிகரெட்டுக் குடிப்பதில் இருந்த ஆசை நந்தனருக்கு சிதம்பர தெரிசனத்தில் இருந்த ஆசையை விட லக்ஷம் பங்கு அதிகமாய்ச் சொல்லலாம். இவன் போன வழியில் ஒரு ரிக்ஷா வண்டிக்காரப் பறையன் மரத்தடியில் தன் வண்டியைப் போட்டுவிட்டு உட்கார்ந்து ஆனந்தமாக ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து இழுத்துக் கொண்டே இருந்தான். பிராம்மணப் பையன் சுற்று முற்றும் பார்த்தான். வேறே மனிதரே காணப்படவில்லை. நடு ரஸ்தாவில் சாப்பாட்டு

அடுக்கை வைத்துவிட்டு, அந்த ரிக்ஷாக்காரன் சிகரெட்டுக் குடிப் பதைப் பார்த்தபடியே ஸ்தம்பித்து தடைக் கட்டப்பட்ட நாகம்போல நின்றுவிட்டான். அதைக்கண்ட ரிக்ஷாக்காரன் "ஐயிரே! ஏன் நிக்கிறே! கொஞ்சம் சிகரெட்டுக் குடிக்கிறியா?" என்று புரளியாகக் கேட்க, பையன் தனது அவலில் அதை உண்மையென்று நம்பி, அவனிடம் போய்ப் பல்லைக்காட்டி நபந்து, அவனுடைய வாயிலிருந்த சிகரெட்டை வாங்கித்தனது வாயில் வைத்து நாலைந்து தரம் இழுத்த பின் அதை அவனிடம் கொடுத்துவிட்டதன்றி, அவனிடம் ஏற்பட்ட நன்றி விசுவாசத்தைக்கருகி, சாப்பாட்டு அடுக்கிலிருந்த இரண்டு மூன்று அப்பளங்களை அப்படியே எடுத்து ரிக்ஷாக் கூலிக்காரனிடம் கொடுத்து விட்டுப்போனான். அதை நான் என் கண்களால் பார்த்தேன். சுருட்டுப் பைத்தியம் இப்படி இருக்கிறது. காப்பிப் பைத்தியத்தின் மகிமை உலகப் பிரத்யக்ஷமானதால் அதைச் சொல்லவே தேவையில்லை. போனமாசத்தில் கோமளேசுவரன் பேட்டைக்கு நான் போயிருந்தேன். இந்த ஊரில் எங்கே போனாலுந்தான் வழி நெடுக காப்பிக் கிளப்புகளாகவே இருக்கின்றனவா. அடிக்கொன்றா யிருக்கும் காப்பிக் கடைகளையும், அவைகளிற்குள்ளிருந்து கும்பல் கும்பலாக மனிதர் தாம்பூலமும் கையுமாகவும், மீசையிலுள்ள நெய், காப்பித்திவலை முதலியவற்றைத் துடைத்துக்கொண்டும் வருவதையும் பார்க்கும் போதே, பசியே இல்லாத குன்மரோகஸ்தனுக்குக் கூட கொஞ்சம் பசி உண்டாவதுபோல ஓர் உணர்ச்சி உண்டாகிறதல்லவா. நான் வீட்டிலிருந்து புறப்படும்பொழுதே வயிறு நிறைய சாதம் சாப்பிட்டு விட்டுத்தான் புறப்பட்டேன். ஆனால் கோமளேசுவரன் பேட்டைக்குப் போய் அங்கிருந்த ஆடம்பரமான ஒரு கிளப்பைக் கடந்துபோன காலத்தில், உள் பக்கத்தில் காப்பிக்கொட்டை வறுத்ததால் உண்டான பிரம்மாநந்தமான வாசனை என் மூக்கில் வந்து தாக்கவே, என் கால்கள் அதன் வழியை விட்டு என்னை அந்தக் கடைக்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டன. என் நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்து விட்டது. என் வலது கை ஜேபிக்குள் நுழைந்து, அதற்குள் சில்லரை எவ்வளவு இருக்கிறதென்று பார்த்தது. ஜேபிக்குள் டிராம் வண்டிக்கு வேண்டிய 2 அணாவே இருந்தது. அதைக்கொண்டு காப்பி சாப்பிட்டுவிட்டு, கால் நடையாகவே வீட்டுக்குப் போய்விடலாமென்ற தீர்மானத்தை உடனே என் மனம் செய்து கொண்டது. நான் உள்ளே

நுழைந்துவிட்டேன். அப்போது அவ்விடத்தில் சுமார் முப்பது ஜனங்கள் சிற்றுண்டிகளும் காப்பியும் அருந்திக்கொண் டிருந்தார்கள். நான் காப்பி மாத்திரம் வரவழைத்து மேஜையின்மேல் வைத்துக் கொண்டு சப்பிச்சப்பிச் சாப்பிடத் தொடங்கினேன். அப்போது அங்கிருந்து காப்பி சாப்பிட்ட ஒருவர் தமது மூக்கை சிணுக்கிச் சிணுக்கித் தமது முகத்தை அப்புறம் இப்புறம் திருப்பி "என்ன ஐயா! காப்பியில் ஒருவித அழுகல் நாற்றம் உண்டாகிறதே!" என்றார். இன்னொருவர் "என் காப்பியும் அப்படித்தான் நாறு கிறது" என்றார். அப்போது உள்புறத்தில் வறுக்கப்பட்ட கொட்டை களின் வாசனை எங்கும் நிறைந்து போயிருந்தமையால், எனக்கும் மற்றவருக்கும் நாங்கள் சாப்பிட்ட காப்பியில் எவ்வித துர்நாற்ற மும் தோன்றவில்லை. நாங்கள் எங்கள் காப்பியை விடாமல் உறிஞ் சிக்கொண்டே இருந்தோம். துர்நாற்றம் இருப்பதாகச் சிலர் சொன் னதைக்கேட்ட கடைக்காரர் "அப்படி ஒன்றும் இருக்காதே. நாங் கள் எல்லாவற்றையும் சுத்தமாகத்தானே வைத்திருக்கிறோம்" என்று நயமாகவும் கம்பீரமாகவும் கூறினார்.

நாற்றமிருப்பதாகச் சொன்ன மனிதர் பிடிவாத குணமுடையவ ராதலால், அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல், நாய் மோப்பம் பிடிப்பது போல தம்முடைய மூக்கால் காற்றை இழுத்து இழுத்துப் பரீட்சை பார்த்துக்கொண்டே அடுப்பண்டை போனார். அவ்விடத்தில் ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்த காப்பிக் கஷாயத்தை மோந்துப் பார்த்தார். அதில் துர்நாற்றம் இல்லை. அடுப்பில் பெரிய தவலையில் காய்ந்து கொண்டிருந்த பாலில் கரண்டியைப்போட்டு ஒரு கரண்டி பாலை எடுத்து மூக்கின் அருகில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு மோந்து பார்த்தார். அதில் அபாரமான துர்நாற்றம் இருந்ததை உணர்ந்து, "ஐயா! இந்தப் பால் என்ன இப்படி நாறுகிறதே! எல் லோரும் வந்து இதைப்பாருங்கள்" என்று ஓங்கிக் கூறியவண்ணம், தமது கையிலிருந்த கரண்டியைத் தவலைக்குள்விட்டுக் கிளரி வெளி யில் எடுக்கவே, அந்தக் கரண்டி கனமாக இருந்தது. ஏதோ வஸ்து வழுக்கி வழுக்கிப் பாலுக்குள் விழுந்தது. விடாமுயற்சியோடு அவர் பிரயாசைப்பட்டு பாலுக்குள் இருந்த வஸ்துவை வெளியில் எடுக்க, நன்றாக வெந்து போன ஒரு சாரைப்பாம்பின் உடம்பு அந்தப் பாலிற்

குள்ளிருந்து வெளிப்பட்டது. அதைக் காணவே, அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுடைய நிலைமை இப்படித்தானிருந்த தென்று சொல்லமுடியாது. எல்லோரும் சேர்ந்து கடைக்காரரையும் ஆள் களையும் வையவும் அடிக்கவும் முயன்றனர். சிலர் குபீர் குபீரென்று குடங் குடமாக வாந்தி எடுத்தனர். தாம் பிரயாசைப்பட்டு உள்ளே செலுத்திய காப்பி வெளியில் வந்து விடப்போகிறதேயென்று சிலர் தமது கழுத்தையும் மார்பையும் தடவிக்கொடுத்து வெளியில் வர எத்தனித்த காப்பியைத் திருப்பி விட்டு "இந்த வழியாக வரவேண் டாம்" என்று கண்டித்து வயிற்றிற்குள்ளேயே அனுப்பினர். வேறு சிலர் பாம்பு விழுந்ததனால் கொஞ்சம் வாசனைக்குறைவு ஏற்பட்டிருந் தாலும், காப்பி வழக்கத்தைவிட அதிக தடிப்பாகவும் ருசியாகவும் இருக்கிறது. அது எப்படி இருந்தாலும் கொஞ்சம் உள்ளே செலுத்தா விட்டால், தலைவலி உண்டாகிவிடும். அதுவும் தவிர, காப்பி சாப்பிட வேண்டுமென்ற அந்த வேட்கையும் தணியாது. இருந்தபடி இரு கட்டும்; கொஞ்சம் சாப்பிட்டு வைப்போம்" என்று நினைத்து, அதிக மாக மூக்கை உபயோகப்படுத்தாலும், வாசனையை இழக்காமலும், சுவாசத்தை ஒடுக்கிக் கொண்டபடி காப்பியை அவசரமாக உள்ளே செலுத்திவிட்டு, பாம்பை நேரில் பார்த்தால் மனதிற்கு அரோசிகமா யிருக்குமென்றும், அதன் பிறகு வாந்தி உண்டானாலும் உண்டாகலா மென்றும் நினைத்து தட தடவென்று ஓட்டலை விட்டு வெளியில் போய் விட்டனர். காப்பியின் மகிமை எப்படி இருக்கிறது பார்த்தீரா?

அடியளந்தார்:— பேஷ்! பேஷ்! பலே! நன்றாக இருக்கிறது! மற்றவர்கள் செய்ததை மாத்திரம் சொன்னீரே! அப்போது நீர் என்ன செய்தீரென்பதைச் சொல்லவில்லையே!

ஊரளந்தார்:—அந்த சமயத்தில் என் மனம் இருந்த குழப்பமான நிலைமையில் நான் என்ன செய்தேனென்பது அவ்வளவு நன்றாக நினை விற்கு வரவில்லை. வண்டியில் ஏறிக்கொண்டு போவதற்காக வைத் திருந்த காசைக்கொடுத்து வாங்கிய காப்பி நமக்கு ஒட்டாமல் போய் விட்டதே என்ற விசனம் ஒரு பக்கத்தில் உண்டாயிற்று. அது வரை யில் எத்தனையோ பேர் வந்து காப்பி சாப்பிட்டு விட்டு ஒன்றும் சொல் லாமல் போயிருக்க, நான் சாப்பிடப் போன சமயத்தில்தானா, எவனோ ஒருவன் தோன்றி, அது நாறுகிறதென்று கண்டு, பாம்பை வெளிப்

படுத்தவேண்டும் என்ற ஆத்திரம் இன்னொரு பக்கத்தில் உண்டா யிற்று. அந்த சமயத்தில் என் காப்பியில் அரை பாகம் என் வயிற்றிற் குள்ளும், அரைபாகம் பாத்திரத்திலுமாக இருந்தது. பால் பாத்திரத் தில் கிடந்த பாம்பைப் பார்க்கக் கூடாதென்று நான் வேறு பக்கத்தில் என் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். அதோடு அத்தனை பேர் அரு வருப்போடு பேசியும், வாந்தி யெடுத்தும் அமர்க்களம் செய்யும்போது நான் மிகுதிக்காப்பியை சாப்பிட்டால், அது பார்வைக்கு விகாரமாக இருக்குமென்று நினைத்து, நான் அதை அப்படியே வைத்துவிட்டு, கடைக்காரரை வைது கொண்டே எழுந்தேன். மற்றவர்களைப்போல நானும் செய்யாவிட்டால், அது விகாரமாக இருக்குமென்ற நினை வினால், நானும் வாந்தியெடுக்க வேண்டுமென்று பார்த்தேன். வயசான கிழவனுக்கு தனது பாலிய ஸம்சாரத்தினிடம் எவ்வளவு வாஞ்சை யும் பிரேமையும் இருக்குமோ, அதுபோல, என் வயிற்றுக்கு காப்பி யினிடம் அவ்வளவு அபாரமான மோகமாதலால், உள்ளே போன காப்பியை வயிறு வெளியில் அனுப்பவே மாட்டேனென்று சொல்லி மறுத்து விட்டது. நான் வாந்தி யெடுப்பவன் போல, ஓசை மாத்தி ரம் பிரமாதமாகச் செய்துவிட்டு, அவ்விடத்தைவிட்டு வந்துவிட் டேன். அப்படி ஆர்ப்பாட்டம் செய்ததனால் கடைக்காரனுக்கு நான் கொடுக்கவேண்டிய அணா எனக்கு லாபமாயிற்று. தன்னை வையா மலும் அடிக்காமலும் ஜனங்கள் போனால் போதுமென்று கடைக் காரன் கவலைப் பட்டு பயந்தானதையால், அவன் எவரிடத்திலும் அணா வாங்கவேண்டுமென்று எண்ணவே யில்லை. வயிற்றிற்குள்போன காப்பி லாபமென்று எண்ணிக்கொண்டு, நான் வண்டியில் ஏறித்திரும்பி வந்து விட்டேன்.

அடியளந்தார்:—நல்ல காரியம் செய்தீர்! கோமுட்டி செட்டியார் கணக்குப் பார்த்து ஆதாயம் கண்டு பிடித்ததாக ஒரு கதை சொல்வார் களே; அதுபோல இருக்கிறது நீர் லாபக்கணக்குப் பார்த்தது. ஆனா லும் நீர் போட்டகணக்கு சரியானதல்ல; வயிற்றிற்குள் போன காப்பி உமக்கு லாபமென்று சொல்வது சரியாகாது. வீட்டுக்குத்திரும்பி வரும்போது வண்டியில் ஏறி வந்ததே லாபமாயிற்று என்று சொல்வ தல்லவா சரியன வார்த்தை. ஏனென்றால், ஓட்டல் காரன் உமக்குக் காப்பி கொடுத்து விட்டான். அதில் அரைப்பாகம் நீர் உள்ளே

செலுத்திவிட்டீர். அவன் பாலில் பாம்பை வேண்டுமென்று போட்டிருக்கமாட்டான். அவனுக்குத் தெரியாமல் அது தற்செயலாக மேன் கூரையிலிருந்து நழுவி பால்தவலைக்குள் விழுந்திருக்கிறது. ஆகையால் அவன் பேரில் குற்றமே இல்லை. அவன் உமக்குக் கொடுத்த காப்பிக்கு நீர் அவனுக்கு அணு கொடுப்பதே நியாயம். நீர் பாதி சாப்பிடும் போது, அது நாறுகிறதென்று சொல்லி பாம்பு சங்கதியை வெளிப்படுத்திய மனிதன் பேரிலேயே தப்புமுழுதும். அவன் அப்போது அதை வெளியிடாதிருந்தால், நீர் எல்லாக் காப்பியையும் சாப்பிட்டு, கடைக்காரனுக்கும் அணுவைக் கொடுத்து விட்டு வந்திருப்பீர். நீர் அரைப்பாகம் காப்பி சாப்பிட்டதில், உம்முடைய நாக்கின் வேட்கை தீர்ந்துபோய்விட்டது. அதோடு அணு மிச்சப்பட்டது. அதனால் ஏற்பட்ட வண்டியேற்ற சுகம் லாபமல்லவா.

ஊரளந்தார்:—சரி ; நடந்த விஷயத்தை நான் உள்ளபடி சொல்லி விட்டேன். லாபநஷ்டக் கணக்கை நீர் எப்படியாவது போட்டுக் கொள்ளும்.

அடியளந்தார்:—நீர் சொன்ன வரலாற்றை நினைக்க நினைக்க, என் மனசில் உண்டாகும் ஆச்சரியத்தைச் சொல்லவே முடியவில்லையே! இந்தக் காப்பி மனிதரை இப்படியும் அடிமையாக்குமா? சீமான் முதல் தோட்டி வரையில் பொழுது விடியுமுன்னும், அஸ்தமிக்குமுன்னும் காப்பியைக் காணவிட்டால் உயிரை விட்டு விடும்படியான அவஸ்தையல்லவா உண்டாயிருக்கிறது. எப்படிப்பட்ட நிர்ஜலமான விரத தினங்களில்கூட காப்பி சாப்பிடுவது மாத்திரம் தோஷமில்லையென்று சாஸ்திரோத்தமர்கள் கூட உணர்ந்து, அதற்கு உபநிஷத்துகளில் தக்க ஆதாரம் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்களென்று கேள்வி.

ஊரளந்தார்:—பிராம்மணர்கள் பிரம்மாவினுடைய முகத்திலிருந்தும், க்ஷத்திரியர்கள் தோளிலிருந்தும், வைசியர்கள் வயிற்றிலிருந்தும், சூத்திரர்கள் கால்களிலிருந்தும் உற்பத்தியானதாக நம்முடைய சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவல்லவா. மனிதர் எங்கே போனாலும், அவர்களுடைய முகந்தானே முன்னால் போய் எதையும் கவனித்து நன்றாக ஆராய்கிறது. அதுபோல, புதிதாக வரும் எந்த நாகரிகத்

தையும் முதன் முதலாக ஏற்றுக்கொண்டு அதை ஆராய்ச்சி செய்யும் கடமை மனிதரில் முகம்போல இருக்கும் பிராம்மணர்களைச் சேர்ந்த தல்லவா. ஆகையால் தான், அவர்கள் இங்கிலீஷ் படிப்பிலும், காப்பிக்குடிப்பிலும் முதன்மை பெற்று நிகரற்று விளங்குகிறார்கள். தாம் செய்யும் எந்தக் காரியத்திற்கும் உபநிஷத்துக்களிலிருந்து தக்க ஆதாரம் கண்டு பிடித்து உலகத்தோர் உய்ந்துபோகும்படி உதவுவது அவர்களைச் சேர்ந்த பொறுப்பல்லவா. ஆகையால் அவர்கள் செய்தது நியாயமான விஷயம். இதைப் பேசும்போது, சுமார் 12 வருஷத்திற்குமுன் நான் படித்த சுந்தராங்கி என்ற ஒரு புஸ்தகத்தில் இருந்த சில பாடல்களின் நினைவு உண்டாகிறது.

அடியளந்தார்:—அந்தப் புஸ்தகம் என் தம்பி மெட்ரிகுலேஷனுக்குப் படித்த காலத்தில் அவனுக்குப் பாட புஸ்தகமாக ஏற்படுத்தப் பட்டிருந்ததாக அவன் எப்போதும் வைத்துப் பாடிக் கொண்டிருப்பானே. அது நம்முடைய நாவலிஸ்டு வடுவூர் ஐயங்காரால் எழுதப் பட்டதல்லவா ?

ஊரளந்தார்.—ஆம், ஆம். அந்தப் புஸ்தகந்தான். அதில் அவர் இந்தக் காப்பியின் மகிமையை அப்போதே கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். நம்முடைய சாஸ்திரோத்தமர்கள் பழைய காலத்தில் எப்படி இருந்தார்கள் என்பதையும், இப்போது எப்படி இருக்கிறார்களென்பதையும், அந்தப் பாடல் நன்றாகக் காட்டுவதோடு, இந்தக் காப்பியை அவர் எதற்கு உவமித்திருக்கிறாரென்பதும் விளங்கும்.

அடியளந்தார்:—ஆகா ! அப்படியா ! அவர் என்ன சொல்லியிருக்கிறார். அந்தப் பாட்டுகளைச் சொல்லும் கேட்கலாம்.

ஊரளந்தார்:—பழையகாலத்து மறையோர் எப்படி இருந்தார்கள் தெரியுமா ?

"துதிகொண்ட மறையோர்கள் நதிசென்று திரிகாலம்
துகள்செல்ல முழுகி எழுவார் ;
துதைகின்ற வினைதீர மனநைந்து ஜெபஹோமம்
முதலுற்ற கருமம் புரிவார்;
விதியோப்ப இதிஹாசம் முடிவற்ற பலவேதம்
இணையற்ற பதினேன் கதையாம்

எனுமிக்க ஒளிர்ஞானம் விகசிக்கும் வழியான
இவை முற்றும் படனம் புரிவார் ;
உதயன்தன் ஒருபாதை விலகிடினு மிவர்நீதி
முறைதப்பி வழுவல் உளதோ ?
முடியற்று விழுமேனும் மொழிதப்பி யொழுகார்கள் ;
ஒழிவின்றிக் கடவுள் தெளிவார் ;
அதிதிக்கு மனதோடு துதிசெய்தும் உணவீவர்,
அழிவற்ற பதவி யடைவார் ;
தலைவன்தன் நிலைபேறு, மழைபெய்தல், செழிதேயம்
அவரின்றி அணுவு மிலவாம்''

பார்த்தீரா பழைய காலத்தில் பிராம்மணர் எப்படி இருந்தார்களென்பதை. இப்போது அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன் கேளும்.

“ கலிகால மறையோர்கள் அதிகாலை சென்றிவேர்
காப்பி,டீ, விற்கும் இடமே;
கவலாது பலநீசர் கழுவாத எச்சில்தனில்
ஆசையோ டுண்டு மகிழ்வார் ;
தலை*போடி மேலங்கி கீழங்கி கொண்டிடுவேர்
ஆங்கிலே யர்கள் போல்வார் ;
சதாகாலம் லேமனேடும் உயர்சோடா நேட்டிடுவேர்
சார், மிஸ்டர் என்று சொல்வார் ;
சிலைமீதும், செம்பிலும், தெய்வமே தென்றிடுவேர்
வேதமோ †டாம்,லை என்பார்;
சேவகா விர்த்தியே தலைமையாய் ஏற்றிடுவேர்
கேவலம் பல்லி ளிப்பார் ;
அலகிலாப் புளுகோடு அழுக்காறு சுயநன்மை
மோசமும் சோளும் உடையார் ;
பலபாஷை கலவாது மொழியார்கள் கலிகால
ஆரியோர் என்ன விந்தை !

எப்படி இருக்கிறது பார்த்தீரா ! முன்பு அந்தணர் மூன்று காலமும் தவறாமல் ஆற்றில் முழுகி நீராடியதற்கு பதிலாக இப்போது காப்பிப்

---

*போடி - மொட்டை, †டாம்,லை,-இங்கிலீஷ் வசவு,

பாத்திரநதியில் முக்காலமும் தவருமல் விழுந்து முழுகுகிருர்கள் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தீரா?

அடியளந்தார்:—பேஷ்! நன்ருயிருக்கிறது பாட்டு. அத்தனை வருஷத்திற்கு முன்பே காப்பியின் மகிமை அப்படி இருக்க, இப்போது அது எவ்வளவு தூரம் அபிவிர்த்தி யடைந்திருக்கவேண்டும். இந்தக் காப்பியினிடத்தில் மனிதருக்கு ஏற்பட்டிருக்கும் பிரமை,உண்மையிலேயே அந்தக் காப்பிக்கொட்டையில் இருக்கும் யோக்யதையினுலா, அல்லது, அதைக்கொண்டுவந்து நம்முடைய மலைப்பிரதேசங்களில் வளர்த்து அபிவிருத்திசெய்து குபேர சம்பத்தைத் திரட்டிக்கொண்டிருக்கும் வெள்ளைக்கார துரைகளின் சுக்கிர தசையினுலா, அல்லது, நம்முடைய தேசத்து ஜனங்களெல்லோரும் அதைக் குடித்து வயிற்றைக் கெடுத்துக்கொண்டு, நீரிழிவு, பிளவை முதலிய ரோகங்களைப்பெற்று வெகு சீக்கிரத்தில் அற்பாயிசாய் மாண்டு போகக்கடவதென்று நம்முன்னேர் யாராவது சபித்துவிட்டுப் போயிருப்பதனுலா என்பதுதான் நமக்கு விளங்கமாட்டேனென்கிறது. எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். நீர்தான் ஒரே வார்த்தையாகச் சொல்லிவிட்டீரே; சில விஷயத்தைச் செய்வது கெடுதலென்று மனசிற்கு நன்ருய்த் தெரிந்திருந்தாலும், ஏதோ ஒரு பிசாசு நமக்குள் புகுந்துகொண்டு அதைச் செய்தே தீரவேண்டுமென்று தடுக்க முடியாவகையில் தூண்டுகிறதென்பது மாத்திரம் நிஜமான விஷயந்தான்.

ஊரளந்தார்:— அதைப்பற்றி சந்தேகமென்ன? தாசிவேசைகலெல்லாம் தம்முடைய பகற்பொழுது வீணுய்த்தானே போகிறதென்று இப்போது அதையும் பயன்படுத்திப் பணமாய்மாற்ற யத்தனித்துவிட்டார்களல்லவா. பழைய காலத்தில் அச்சுயந்திரம் கிடையாது; காகிதம் கிடையாது; மனிதர் படிப்பதற்குப் புஸ்தகம் கிடையாது. அத்தி பூத்தது போல படித்தவர்கள் சிலர் அரும்பாடுபட்டு இராப்பகல் அவஸ்தைப்பட்டு, குருவுபதேசம் பெற்று, ஸந்தை சொல்லி மனப்பாடம் செய்தும், பல வருஷகாலம் பனை ஓலைகளில் எழுதியும் ராமாயணம், பாரதம் முதலிய பிரம்மாண்டமான இதிகாச புராணங்களை வசனநடையில் எழுதினுல் அசாத்தியமாய்ப் பெருகுமென்று, கவிகளாய்ச் சுருக்கி எழுதிவைத்துக் கொண்டார்கள்.

அந்த எட்டுப்பிரதி லக்ஷம் பேருக்கு ஒருவரிடத்தில்தான் ஜீவதனம் போலஇருக்கும். அதை வைத்துக்கொண்டு சாஸ்திரோத்தமர்கள் மற்ற ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்வார்கள். ஒரு ராமாயணம் முழுதும் கேட்பதற்கு ஜனங்கள் கும்பல் கும்பலாய்க் கூடி வருஷக்கணக்கில் இரவில் கண்விழித்து உட்கார்ந்து கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். இப்போதைய நிலைமை அப்படி இல்லை. அச்சுயந்திரம் வந்து விட்டது. காகிதம் செய்யும் வழி கண்டுபிடிக்கப்பட்டுப் போய்விட்டது. பனைமரமெல்லாம் மொட்டையடிக்கப்படாமல் க்ஷேமமாய்த் தழைத்து நிற்கின்றன. எழுத்தாணி என்றால் என்ன என்பதே இப்போது ஜனங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. அச்சு யந்திரம் ஒரு நாளில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை அடித்துத் தள்ளி விடுகிறது. அடுப்பூதிக்கொண்டிருக்கும் அத்தைப்பாட்டிகளெல்லாம் இராமாயணத்தை இரண்டு மணிநேரத்தில் படித்துக் கரைகண்டு, மேலே படிக்கப் புஸ்தகம் புஸ்தகம் என்று புஸ்தகவிடாய் கொண்டு அலையத்தலைப்பட்டு விட்டார்கள். மூளைக்கு ஓயாமல் புஸ்தக ஆகாரம் கொடுத்துக்கொண்டே இருப்பதால், எல்லோரும் ராமாயண சாஸ்திரிகளாயும் பாகவதோத்தமர்களாகவும் விளங்கத்தொடங்கி விட்டனர். நான் முன்னே சொன்னபடி தாசிகளும், வேசைகளும், சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்கிறபடி, யாரோ எழுதிக்கொடுக்கும் கதைகளை நெட்டுருப்போட்டு, சமயோசிதமான பாட்டுகளைக் கலந்து வைத்துக்கொண்டு, ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்து பரமபாகவத சிரோன்மணிகளாய் விளங்கத்தலைப்பட்டு விட்டனர். விபசாரம் செய்யக்கூடாதென்றும், பிறர் பொருளை அபகரிக்கக்கூடாதென்றும், தெய்வபக்தியொன்றையே மனிதர் கடைப்பிடித்து ஈடேற வேண்டுமென்றும், அவர்கள் கதாப்பிரசங்க காலத்தில் மகா உருக்கமாகச் சொல்வதைப் பார்த்தால், உண்மையிலே அவர்கள் தம்முடைய ஜாதித்தொழிலையே விட்டுவிட்டார்களோ என்றே தோன்றுகிறது. ஆனால், உண்மையில் அவர்களுடைய கருத்து என்னவென்றால் தம்முடைய அழகைக்கொண்டும், பனாரீஸ்புட்டாச் சேலையையும் சூது வைர நகைகளையும் அணிந்து ஜெகஜ்ஜோதியாக நிற்கும் அலங்காரத்தைக் கொண்டும், தமது பாட்டின் வசீகர சக்தி, தமது ஸாகஸங்களின் திறமை முதலியவற்றைக் கொண்டும் தம்மை அதிகமாக விளம்

பரப்படுத்தி, தமது ஜாதி வர்த்தகத்தை அமோகமாய் அபிவிருத்தி செய்வதற்கன்றிவேறல்ல.மற்றைய நாளைவிட அன்றையஇரவில் அவர்களுடைய குடியும், அட்டூழியமும், மோசமும் அதிகமாயிருக்குமென்பது நிச்சயம். அவர்கள் பகலில் தங்களுக்கெதிரில் கூடியிருக்கும்ஜனங்களுக்கு மிகமிக நைந்து உருகிச் செய்யும் உபதேசங்களை அவர்கள் எவ்வளவு தூரம் இரவில் பின்பற்றி நடக்கிறார்களோ அதுபோலத்தான் நீர் சொல்லும் காப்பிக்குடி விஷயமும் இருக்கிறது. காப்பிக்குடி முதலிய விஷயங்களினால் கெடுதல் உண்டாகிறதென்பதும், ஆகையால் அதைச் செய்யக்கூடாதென்பதும் மனிதருக்குத் தெரிந்திருந்தாலும், அவர்கள் அதை விலக்காமல் செய்வது, தாசிகள் பகலில் பிறருக்கு ஹரிகதாப்பிரஸங்கம் செய்து, நற்குணம் போதித்து இரவில் அத்தனை கெடுதல்களையும் வட்டியும் முதலுமாய்ச் செய்வதுபோலத்தான் இருக்கிறது.

அடியளந்தார்:—வேசை பாகவதர்கள் செய்யும் உபதேசம் அவர்களுடைய மனசிலேயே முதலில் படுகிறதில்லையே. பிறர் அதைக் கேட்டு என்ன பலனை யடையப்போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

ஊரளந்தார்:—மனிதன் தான் முதலில் சுத்தனும் யோக்கியனும் இருந்தால்தான், அவனுடைய சொல்லுக்கு ஒரு மதிப்பு ஏற்படும். அது பசுமரத்தாணிபோலப் பிறருடைய மனதில் பதியும். குடிகாரன் குடிக்கக் கூடாதென்றும், வேசைகள் விபசாரம் செய்யக் கூடாதென்றும், திருடன், பிறர் பொருளை அபகரிக்கக் கூடாதென்றும், முழுப்புளுகன் பொய்யே சொல்லக்கூடாதென்றும் பிறருக்கு உபதேசம் செய்யப்போனால், "முதலில் நீ உன்னைத் திருத்திக் கொள், பிறகு நீ வந்து எங்களுக்கு உபதேசம் செய்யலாம்" என்று பிறர் சொல்லுவார்களேயன்றி, அவர்களுடைய உபதேசத்திற்கு எவ்வித மதிப்பும் வைக்கமாட்டார்கள். ஆனால், இந்த வேசைபாகவதர்கள் செய்யும் ஹரிகதா காலக்ஷேபத்திற்குப் போகிறவர்கள் அங்கே போய் பக்திரஸத்தைப் பெருக்கிக்கொண்டு வரமுடியாவிட்டாலும், பலவகையில் சிங்கார ரஸத்தையாவது அநுபவிக்கிறார்களல்லா. அந்த லாபம் போதாதா?

ஊரளந்தார்:—பகவத் விஷயத்தில் ஈடுபட்ட பக்தரையல்லவா பாகவதரென்று சொல்வது. கடவுளேயே கனவிலும் நினையாதவர்களும், கடவுளின் பெருமையை அறியாதவர்களுமான வேசைகளும், தில்லாஞ, டப்பான் முதலிய பாடும் பாடகர்களும் பாகவதர்கள் என்று பெயர் வைத்துக்கொள்வது பொருந்துமா?

அடியளந்தார்:—சுடுகாட்டை நன்காடு என்றும், கள்ளை கங்கா சாகரம் என்றும் சொல்வது எவ்வளவு தூரம் பொருந்துகிறதோ, அதுபோலத்தான் இதுவும் பொருந்துகிறது.

ஊரளந்தார்:—பாகவதர் என்பது முக்கியமாக ஆண்பாலைக் குறிக்கிற சொல்லல்லவா? அதற்குப் பெண்பால் என்ன ஐயா?

அடியளந்தார்:—பகவதி என்று சொன்ஞலென்ன?

ஊரளந்தார்:—(சிரித்துக்கொண்டு) பேஷ்! நன்ருகச் சொன்னீர். வெறும் பகவதி என்று சொன்ஞல் அழகில்லை. மலையாள பகவதி என்று சொல்லும். அப்போதுதான் அர்த்த புஷ்டி ஏற்படும்.

அடியளந்தார்:—கல்விப்பிரசங்கம் செய்பவர்கள் ஆஞக இருந்தாலும், பெண்ஞக இருந்தாலும், அவர்கள் சரஸ்வதிக்கு சமதையானவர்கள். ஆகையால் பகவதி என்பதைவிட்டு கமல ஸரஸ்வதி என்ற பெயரை ஸ்பெஷலாக இந்த வேசைபாகவதர்களுக்குக் கொடுத்தால், அர்த்த புஷ்டியோடு அழகும் உண்டாகுமென்று நினைக்கிறேன்.

ஊரளந்தார்,—அதில் அர்த்தபுஷ்டி என்ன இருக்கிறது?

அடியளந்தார்:—வெண்தாமரைப் புஷ்பம் ஒரு தட்டுபோல இருக்கிறது. அதன்மேல் சரஸ்வதி உட்கார்ந்திருக்கிருளல்லவா. ஆகையால் கமலம் என்ருல் தட்டு என்று வியாக்கியானம் செய்யலாம். சரஸ்வதி என்ருலும் வாணி என்ருலும் இரண்டும் ஒரே அர்த்தம் கொடுக்கும். ஆகையால் கமல சரஸ்வதி என்ருல் தட்டுவாணி என்று அர்த்தம் கொடுக்கிறதல்லவா?

ஊரளந்தார்:—பேஷ்! பேஷ்! நன்ருகச் சொன்னீர்! துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும் வேசைகள் ஹரிகதா கால க்ஷேபம் செய்தால் அவர்களுக்கு மாத்திரம் நாம் அந்தப் பெயரை வைக்கலாம். சன்மார்க்கமாகவே ஒழுகும் ஸ்திரீகளும் ஹரிகதா காலக்ஷேபம் செய்

கிறார்களல்லவா. அவர்களுக்கு நாம் இந்தப் பெயரை வைப்பது பொருந்ாதல்லவா?

அடியளந்தார்:—அவர்கள்தான் தம்முடைய பெயருக்குப் பின்னால் பாயி என்ற அடைமொழியைச் சேர்த்துக்கொள்ளுகிறார்களே.

ஊரளந்தார்:—பாயி என்றால், மகாராஷ்டிர ஜாதியார், மாத்வ ஜாதியார் முதலியோருடைய ஸ்திரீகளல்லவா பாயி பாயி என்று வைத்துக்கொள்வது வழக்கம். கதாப்பிரசங்கம் செய்பவரில் அம்பட்டச்சியும் இருக்கிறாள், வண்ணாத்தியும் இருக்கிறாள், பாப்பாத்தியுமிருக்கிறாள், குறத்தியுமிருக்கிறாள். அவர்களெல்லோரும் பாயி என்று தம் பெயருக்குப்பின் வால் ஒட்ட வைத்துக்கொள்வது பொருந்துமா?

அடியளந்தார்:—பொருந்துகிறதோ பொருந்தவில்லையோ. எல்லோரும் அப்படித்தான் வைத்துக்கொள்ளுகிறார்கள். முதலில் ஹரி கதை செய்து பிரஸித்திபெற்ற அம்மாள் பாயி என்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். ஆகையால் பாயி என்பதுதான் பாகவதர் என்ற சொல்லுக்குப் பெண்பாலென்று நினைத்தோ, அல்லது, அதை வைத்துக்கொண்டால், முதல் பாகவதருக்கு ஏற்பட்ட சீரும் சிறப்பும் தமக்கும் ஏற்படும் என்று நினைத்தோ எல்லோரும் அதே பெயரை வைத்துக்கொள்ளுகிறார்கள். பெரியவர்களாகவும் யோக்கியர்களாவும் இருக்கும் நம்முடைய முன்னோர்களின் பெயரைவைத்துக்கொண்டு எப்படியாவது பிழைத்துப் போகட்டுமே. அதில் நமக்கு என்ன கஷ்டமிருக்கிறது. அதுவுமன்றி, நம்முடைய தேசத்தில் வேறே எந்த விஷயத்திலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையென்பது மருந்திற்கும் கிடையாது. இதிலாவது ஒற்றுமை இருப்பது சிலாக்கியமான விஷயந்தானே.

என்று அடியளந்தாரும் ஊரளந்தாரும் லோகாபிராமமாய் சம்பாஷித்துக்கொண்டேவர திருவல்லிக்கேணியில் பாட்டுக்கச்சேரி நடைபெற்ற கட்டிடம் வந்துசேர்ந்து விட்டதாகையால், அவர்கள் தங்களது சம்பாஷணையை அவ்வளவோடு நிறுத்திக்கொள்ள நேரிட்டது. அன்றைய பாட்டுக்கச்சேரி நிரம்பவும் திறமையாகவும் இன்பகரமாகவும் இருக்குமென்ற செய்தி நன்றாக பகிரங்கப்படுத்தப்பட்டுப்

போயிருந்ததாகையால், ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெகு நேரத்திற்கு முன்னுகவே வந்து கட்டிடம் முழுதையும் அடைத்துக்கொண்டனர். அதற்குமேல் ஜனங்கள் உள்ளே உட்காருவதற்கு இடமில்லாமல் போனதுபற்றி நூற்றுக்கணக்கான ஜனங்கள் முன்பக்கத்திலிருந்த ஜன்னலண்டை நெருங்கிநின்று, உட்புறத்தில் நடந்த பாட்டுக் கச்சேரியிலிருந்து சிதரிவந்த ஓசையை நிரம்பவும் அவலோடு அள்ளிப் பருகிய வண்ணம் நின்றனர்.

நமது ஊரளந்தாரும் அடியளந்தாரும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்த காலத்தில், சோதாப்பேட்டை பாகவதர் அட்டகாசமாகத் தலையையும் உடம்பையும் அசைத்து அபிநயங்கள் காட்டி ஹம்சத்வனி ராகத்தை எடுத்து அது ஹிம்சையாக இருந்தாலும் இருக்கட்டுமென்று அதை மேலும் கீழுமாய்த் திருப்பி மடக்கி உருட்டிப்புரட்டி த்வம்சம் செய்து, அந்த ஒரு பாட்டினுலேயே தமது வம்சம் கீர்த்திபெற்று விளங்கவேண்டுமென்று கருதுகிறவர்போலத் தமது திறமை முழுதையும் வியர்வை மூலமாய் நன்ருக வெளிப்படுத்திக் காட்டி அங்கு கூடியிருந்த மகா ஜனங்களெல்லோரையும் ஆநந்த சாகரத்திலாழ்த்த, அவர்கள் மதிமயங்கி உணர்வுகலங்கி மெய்ம்மறந்து, ருதுவான வீட்டில் பெண்கள் செய்வதுபோலக் கைகொட்டி சோபன மடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

உடனே பாடகருக்குக் கட்டிலடங்கா ஆவேசமும் பூரிப்பும் உண்டாகி விட்டன. அவர் அதன் பிறகு ஒன்றன் பின்னென்ருகப் பல கீர்த்தனைகளை எடுத்து அம்மானை யாடுவதுபோல ஆட, அவரது உடம்பும் எழும்பி எழும்பி மேல்ஸ்தாயியைக் காட்டிவிட்டுக் கீழே வந்து கொண்டிருந்தது. கீர்த்தனைகள் முடிந்த பிறகு பாடகர் சம்பிரதாயப்படி ஒரு கனராகத்தை விஸ்தரித்து ஆலாபனை செய்து அதே ராகத்தில் பல்லவி பாடி முடித்தார்; உடனே ராகமாலிகையில் இறங்கி விட்டார். இறங்கியவர் எவரும் அதுவரையில் கேட்டிராத மகா மகா அபூர்வமான ராகங்களையெல்லாம் அப்போதே உற்பத்தி செய்து பாடித் தமது ரோகமூலிகையை முடித்தார். அப்போது எதிரில் இருந்த சிலர் தத்தமக்கு எங்கெந்த ராகத்தில் பிரியமோ அதைப் பாடும்படி கேட்டுக்கொள்ளத் துவக்கினர்.

ஒருவர் "ஐபா! அட்டாணு?" என்றார். இன்னொருவர் "கான டா" என்றார். வேறொருவர் "தோடி பாடுங்கையா" என்றார். அவைகளையெல்லாம் கேட்டுப் புன்னகை செய்தவண்ணம் பாடகர் "எல்லா ராகங்களையும் ஒன்றாய்ப்பாடுகிறதா, அல்லது, தனித்தனி பாடுகிறதா என்பதுதான் தெரியவில்லை" என்று ஹாசியமாகப்பேசவே, அதைக் கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். அப்போது இன்னொருவர் "சகானு, சகானு" என்று ஆர்ப்பரித்தார்.

அவ்வாறு அவர் "சகானு சகானு" என்று சொன்ன சமயத்தில், ஜனக்கும்பலில் நிரம்பவும் பிரயாசைப்பட்டு வழி செய்து கொண்டு பாடகரை நோக்கி அவசரமாக வந்து கொண்டிருந்த ஒரு செவிட்டுக்கிழவர் "சகானு" என்ற சொல்லைக்கேட்டவுடனே தூபம் போட்ட பிசாசுபோல எழும்பிக் குதித்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சகானு ராகம் பாடும்படி கேட்டுக்கொண்ட மனிதரண்டை போய் அவரது கன்னத்தில் பளீரென்று ஓர் அறை கொடுத்தார். அவ்வாறு அடி பெற்றவர் அந்த வயோதிகர் பைத்தியம் பிடித்த மனிதரென்று நினைத்துத் தமது கையை அவரது கழுத்தில் கொடுத்து விசைபாக அப்பால் தள்ளிவிட, அவர் அம்பு பாய்வது போல ஐந்தாறு மனிதருக்கப்பால் போய் அங்கிருந்த ஜனங்களின்மேல் பொத்தென்று விழுந்தார். விழவே, அங்கிருந்தோர் அனைவரும் ஆத்திர மடைந்து வயோதிகரை நன்றாகப் புடைத்து "எனக்குவேண்டாம் பூஷணிக்காய்" என்பதுபோல, அங்கே இருந்து பந்தாடி வேறு பக்கத்தில் அவரை உந்தி விட்டனர். அவர் ஐந்தாறுபேர்கள் மீதில் மோதி யடித்துக் கொண்டு, தபீர் என்று அங்கு உட்கார்ந்திருந்த ஒரு திக்குவாயன் மேல் போய் விழுந்தார்.

அவ்வளவுதான். அந்த மனிதனுக்குக் கோபம் வந்துவிட்டது. ஒரேதள்ளாய்க் கிழவனை புட்பால் அடிப்பது போலத் தூக்கி அப்பால் கிடாசிவிட்டு, "த்த்தத்த்த்த்த்தடிமரம் பொபொபோலே வந்து, எஎஎஎஎ என்மேல் விழுந்தாயாப் ப்ப்ப்ப் பாரு உன்னை நநநநந நசுக்கி விடுகிறேன்" என்று தத்தித்திணரி சண்டைசெய்ய வாரம்பித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் கேளாததுமாயிருந்த செவிட்டுக்கிழவர், தம்மை உருட்டியதையும் பாராமல், சீறிய கோபத்துடன்

திரும்ப அடித்துக் கட்டிக்கொண்டு எழுந்து, திக்கு வாயரிடம் வந்து, "டேய் என்னைப் பார்த்தாடா தாத்தா என்று கூப்பிடுகிறாய்! நான் தாத்தாவாடா உனக்கு? வாய்கூசாது என்னை தாத்தா என்று அழைக்க நீ என் பேரனுடா? ராஸ்கல்! உன்னை என்ன செய்வேன் பார்" என்று சொல்லிக்கொண்டே ஆத்திரத்தோடு அவன்மேல் பாயப்போகும் சமயம், திக்குவாயன், "வ்வ்வ்வ்வ்வ்வராதேக் க்கிக்கிக்க்க் கீழே தள்ளி விடுவேன்." என்று கையை யமர்த்தி தன்னிடம் அவனை அணுக விடாமல் செய்தான்.

அதைக்கண்ட கிழவர், "அடேய்! என்னைப்பார்த்துவ்வ்வ் என்று அழகு காட்டுக்குகிறாயா? நான் உன்னைத் தொடாதவரையில் பிழைத் தாய்; என்னைத் தள்ளியதுமல்லாமல் தாத்தா என்று அழைத்தாய், ஏனழைத்தாய் என்று கேட்பதற்கு நங்குகாட்டி கிழவா என்று சொல்லுகிறாய்? இதோ பாரடா கன்னம் வீங்கி விடுகிறது" என்று கையை ஓங்கிய சமயம் திக்குவாயன் கிழவனது கையைப் பிடித்துக் கொண்டு, "ச்ச்ச்ச்ச்ச்சும்மா இருக்கிறாயா இல்லையா" என்று சொல்லி வாய்மூடுமுன், கிழவர் கையைத் திமிரிக்கொண்டு, "அடே முட்டாள் பயலே! என்னை இவ்வளவுதூரம் அவமதித்தது மல்லாமல்,உங்க வீட்டு நாய் என்று எண்ணி, ச்ச்ச்ச்சு என்று சொல்லுகிறாயா? நான் உங்கள் வீட்டு நாயாடா?" என்று பளீர் என்று அவன் கன்னத்தில் ஓர் அடி விட்டார்.

உடனே பாட்டுக்கச்சேரி பெருத்த அமர்க்களமும் குழப் பமுமாக முடிந்தது. ஆயிரக்கணக்கில் கூடியிருந்த ஜனங்களெல் லோரும் குபீரென்று எழுந்து நின்று "அடி, உதை, கொல்லு" என்று பிரமாதமாகக் கூக்குரல் செய்து திக்குதிசை தெரியாமல் விழுந்து நெருக்க, பாடகரும் பக்க வாத்தியக்காரர்களும் எழுந்து, இருந்த இடந்தெரியாதபடி ஓடிப் போய்விட்டனர். செவிட்டுக் கிழவர் பல இடங்களில் பந்தாடப்பட்டு முடிவில் ஸ்திரீகள் உட் கார்ந்திருந்த இடத்தில் போய், தொந்தி தொப்பை முதலிய அங் கங்களோடு குதிர்போல உட்கார்ந்திருந்த ஒரு விதவையம்மாளின் மடியில் போய் உட்கார, அவர்களும் ஐயோ, அப்பா என்று அலறி யடித்துக்கொண்டு எழுந்து ஒரு பக்கமாக விலகிக்கொண்டனர். கிழவர்

ஸ்திரீகளால் உந்தப்படாமல் அவ்விடத்திலேயே தப்பினேன் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு கிடந்தார். அந்த அமர்க்களத்தைக் கேட்டு, வாசலில் இருந்த ஒரு போலீஸ் ஜெவான் வழிசெய்துகொண்டு ஜனங்களை சமாதானப்படுத்தியபடி உள்ளே போய் என்ன நடந்ததென்று விசாரிக்க, எல்லோரும் நிரம்பவும் ஆத்திரமாகப் பேசினரேயன்றி எவரும் எவ்வித தகவலும் தெரிவிக்கமாட்டாதவராய் விழித்தனர். ஜெவான் எல்லோரையும் உட்கார வைத்துவிட்டு விசாரிக்க, ஒருவர் கிழவரைக் காட்டி, அவரால்தான் அந்தக் கலகம் விளைந்ததென்று கூற, ஜெவான் கிழவரைப் பிடித்து நிறுத்தி, "ஏனையா நீர் இங்கேவந்து கலகம் விளைத்தீர்?" என்று அதட்டிக் கேட்க, அந்தக் கிழவர் முழுச்செவிடராதலால், பிறர் இன்னது சொல்கின்றனரென்பதை அறியமாட்டாமல் பேந்தப் பேந்த விழிக்க, போலீஸ் ஜெவான் தனது தொண்டையைக் கிழித்துக்கொண்டு ஓங்கிக் கேள்விகள் கேட்க, கிழவர் நிரம்பவும் ஆத்திரப்பட்டுப் படபடத்து "ஐயா! சேவகரே! இத்தனைபேரும் சேர்ந்து என்னைக் கொன்றுவிட்டார்களைய்யா! நான் தொண்ணூறு வயசான கிழவன். என்னுடைய பிள்ளை துபாஷ் சாரங்கபாணி முதலி என்ற பையனைக் காணாமல் நான் மூன்று நாளாய்த் தேடியலைகிறேன். நான் சாப்பிட்டு இரண்டு நாளாகின்றன. அவனுக்குப் பாட்டுக் கேட்பதில் பிரியம் அதிகமாகையால், அவன் இங்கே இருக்கலாமென்று தேடிக்கொண்டு வந்தேன். பாடகருக்கெதிரில் உட்கார்ந்திருந்தவனுடைய சாயல் என் மகனுடைய சாயலைப் போலிருந்தது. அவனைக் கண்டுபிடித்து விட்டோமென்ற சந்தோஷத்தில் நான் ஜனக்கும்பலில் வழி செய்துகொண்டு இங்கே வந்தால், அவன் என் மகனல்ல. அப்போது ஒருவன் ஆப்டானா என்றான். இன்னொருவன் காணும்டா என்றான். இன்னொருவன் தேடிப்பாருங்கைய்யா என்றான். அப்போது ஒரு படையன் சாகானா சாகானா என்று என் மகனுக்கு சாபம் கொடுக்க ஆரம்பித்து விட்டானைய்யா! என்ன துடுக்கைய்யா அவனுக்கு! நான் பட்டினிகிடந்து செத்து மூன்று நாளாய்த் தேடியலைந்து தவிக்கிறேன். அவன் சாகானா என்று சபிக்கிறதற்கு இவன் யாரைய்யா!" என்று கூறித் தத்திக்குதித்துத் தாண்டவம் ஆட, அந்தச் செவிடருடைய அதிசயமான வரலாற்றைக்கேட்டு சபா ஜனங்களெல்லோரும் ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து கொல்

லென்று சிரித்துக் கைகொட்டி மறுபடி சோபனமடிக்கத் தொடங்கினர். அதுவரையில் நிரம்பவும் பொறுமையோடு வெளியில் நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த நமது நண்பர்களான அடியளந்தாரும் ஊரளந்தாரும் தமக்குள் வியப்போடு பேசிக்கொண்டு அவ்விடத்தைவிட்டுப் போகவாரம்பித்தனர்.

ஊரளந்தார்:—என்ன வேடிக்கை பார்த்தீரா இது! இந்தச் செவிடு தன் மகன் காணுமல் போய்விட்டானென்று இங்கே வந்து அமர்க்களம் பண்ணிவிட்டது பார்த்தீரா?

அடியளந்தார்:—இது பைத்தியக்காரப் பட்டணமென்பது உமக்குத் தெரியாதா? தஞ்சாவூரை வெள்ளரிக்காய் விற்ற பட்டணமென்று ஜனங்கள் சொல்வதுண்டு; இந்தப் பட்டணத்தைத்தான் அப்படிச் சொல்லவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். நேற்றைய சமாசாரப் பத்திரிகையில் நல்ல நல்ல வேடிக்கை சங்கதியெல்லாம் வந்திருப்பதாக நான் சொன்னேனல்லவா. அதில் முக்கியமான ஒரு சங்கதியை நான் உமக்குச் சொல்லவில்லையே. அது எவ்வளவு ஆச்சரியான சங்கதி தெரியுமா? இந்த ஊருக்கு நான்கு மைலுக்கப்பால் சைதாப்பேட்டை யென்று ஓர் ஊர் இருக்கிறதல்லவா. அந்த ஊரில் டிராமாக் கொட்டகையில் முந்தா நாள் ராத்திரி சம்பூர்ண ராமாயணம் என்ற நாடகம் நடந்ததாம். சீதை வேஷம் போட்டுக் கொண்டவள் ஒரு யௌவன ஸ்திரீயாம். அவளுக்கு வயது பதினேழாம். அவளுடைய அழகை வர்ணிக்கவே முடியாதாம். தெய்வ ரம்பை என்ருலும் அவளுக்கே தருமாம். பாட்டிலும் ஸாகஸங்களிலும் அவளை மிஞ்சக்கூடியவர் இந்த உலகத்தில் யாருமே கிடையாதாம். அவள் அன்றையதினம் தன் உடம்பில் ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுடைய ஆடையாபரணங்களை அணிந்திருந்தாளாம். இராமர், லக்ஷ்மணர், சீதை ஆகிய மூவரும் காட்டுக்குப்போன இடத்தில், அவர்கள் மர உரி தரிக்கவேண்டியதே நியாயமாலுைம், அவள் தான் வசிகரமாக இருக்கவேண்டுமென்பதொன்றையே கருதி, அதிக விலையுள்ள ஆடையாபரணங்களை அணிந்து வெகு ஸொகுஸாக வந்திருந்தாளாம். அவள் பொன்மானைப் பிடித்துத் தரும்படி இராமனை அனுப்பியபின், அவரது அபயக்குரலைக் கேட்டு, லக்ஷ்மணனையும் அனுப்பிவிட்டுத் தனியாக இருந்த காலத்தில், இராவணன் சந்நியாசியாக உருமாறி வந்து, அவளிடம் தந்திரமாக நடந்து, அவளைத் தூக்கிக்

கொண்டு போனானும். அப்படித் தூக்கிக்கொண்டுபோன இராவண வேஷக்காரன் கொட்டகையின் பின்புறத்திலிருந்த வாசலின் வழியாக அவளைத் தூக்கிக்கொண்டு வெளியில் ஓடினானும். அவ்விடத்தில் வேறு சிலர் ஒரு மோட்டார் வண்டியோடு ஆயத்தமாக நின்றனராம். இராவண சந்நியாசியும் மற்றவரும் சீதையை அதில் வைத்து வண்டியை விசையாக விட்டுக்கொண்டு எங்கேயோ மாயமாய் மறைந்து போய் விட்டார்களாம். உண்மையிலேயே அவர்கள் அந்த சீதையை லங்கைக்குத்தான் கொண்டு போய்விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. இப்போது இங்கே உண்டானது போல, அவ்விடத்திலும் பெருத்த அமர்க்களமும் குழப்பமும் ஏற்பட்டனவாம். போலீசார் நாலா பக்கங்களிலும் ஓடிப்பார்த்தனராம். எவ்விதப் புலனும் அகப்படவில்லையாம். டிராமாவின் சொந்தக்காரர் நமது திருவொற்றியூர் ராஜாராம் நாயுடு விடம் போய், அந்த அபூர்வத்திருட்டைக் கண்டு பிடிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறாராம். அது அப்படி இருக்கிறது. இங்கே யாரோ ஒரு பையன் காணப்படவில்லை. இவர்களையெல்லாம் யார்தான் கொண்டு போகிறார்களோ, என்ன கருத்தோடு கொண்டுபோகிறார்களோ என்பதுதான் தெரியவில்லை.

ஊரளந்தார்:—நீர் சொல்வது மகா அதிசயமான சங்கதியாக இருக்கிறதே! வரவர நம்முடைய பட்டணம் லண்டன்தேசம்போல ஆகிவிட்டதே.

அடியளந்தார்:—எல்லாம் இந்த பயாஸ்கோப்பை ஜனங்கள் பார்ப்பதால் உண்டாகும் கேடைய்யா இதெல்லாம். வெள்ளைக்காரர் அவர்களுடைய தேசத்திலுள்ள திருட்டுகளையும் புரட்டுகளையும் கொண்டு வந்து காட்டி மகாஸாத்வீகமாக இருந்த நம்முடைய ஜனங்களையெல்லாம் அநியாயமாகக் கெடுத்துவிட்டார்களய்யா? இன்னம் கொஞ்சகாலத்தில், இந்த தேசம் எப்படிச் சீர்குலைந்து போகப்போகிறது பாரும்.

—என்று பலவாறு சம்பாஷித்துக்கொண்டே இருவரும் சென்றனர்.

182823

குறைந்த விலை ! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு !!

English Self Instructor. Rs. 1-8-0.

இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

இங்கிலீஷ் கற்கும் வழி.

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின் முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்றாக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

புதிய மாதிரி ! நூதனமானது !!

உயர்ந்த வால் நட் கேஸ்.

ஆபீஸ் கிளாக் ரூபா 5.



இந்த ஆபீஸ் கிளாக் பெயர் பெற்ற கெடியார கம்பெனியாரால் செய்யப்பட்டுஎங்களால் வரவழைக்கப்பட்டது. பார்வைக்கு மிக்க அழகாயும், சுவரில் மாட்டுவதற்கு மிக்க ரம்மியமாக இருக்கிறது. எல்லா விடங்களிலும், கவர்ன்மெண்டு, லோகல் பண்டு, முனிசிபல், மற்ற வியாபார ஆபீஸ்களில், இக்கெடியாரம் (ஜெர்மன் தேசத்தின் ஆபீஸ் கிளாக்கை) சந்தோஷத்துடன் உபயோகித்து வருகிறார்கள்.

முந்துங்கள் !!

5 வருஷம் உத்தரவாதம். விலை **1**. க்கு ரூபாய். **5.**

வி. எஸ். வாச் கம்பெனி,

தபால் பெட்டி 105, மதராஸ்.

அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

அமிர்தாஞ்சனம்

1926 காலண்டர்கள் 1926.

சிறந்த ஓவியர்களால் வரையப்பெற்றதும் மூன்று வர்ணங்கள் கொண்டதுமான ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினியின் அழகிய சித்திரப்படங்களிலொன்றுடன் விளங்குவன.

ஒன்று, 0-2-0 டஜன் 1-4-0 நூறு, 9-12-0

தினசரி கிழிக்கும் ஆபீஸ் காலண்டர் ஒன்றுக்கு 0--4-0

(பாக்கிங்கும் தபாற்கூலியும் பிரத்யேகம்.)

படை மருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல் பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச் செட்டி வீதி, சென்னை.

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பட்டது.